
# சிந்தனை செய் மனமே



உருவகக் கதைகள்.

ஆக்கம் : இராசவல்லவன் இராசயோகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை செய் மனமே

நூலாக்கம்.


திரு. இராசவல்லவன் இராசயோகன்

இராம அலுவலர்.



பதிப்பாளர்.

திருமதி. பூமா இராசயோகன்.

( ஆனைக்கோட்டை, மானிப்பாய். )

1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/300/2210

## பொருளடக்கம்

1. முகவுரை-

2. ஓவியம்.

3. அணிந்துரை.

4. ஆசியுரை.

5. அணிந்துரை.

6. ஆசியுரை.

7. பதிப்பாளர் உரை.

## கதைகள்

1. மைனாக் கூட்டமும் சருகாமையும்.

2. ஓணானும் கொள்ளி எறும்பும்.

3. நாயும் வௌவாலும்.

4. கருநாகமும் சோலைக் குயிலும்.

5. வெள்ளைக் கொக்கும் கடுக்காய் நண்டும்.

6. தவளையும் கழுதையும்.

7. ஓநாயும் குதிரையும்.

8. முகவெள்ளைப்பருந்தும் கோழிக்குஞ்சும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

எம் சமூகத்துக்கு நான் என்ன செய்தேன் என்பதை யோசித்து, இயன்றதொரு துரும்புத் தொண்டாகிலும் செய்வோமே என்ற ரீதியில், துணிச்சல், ஆர்வம் என்பவைகளை மையமாக வைத்து இச்சிறு நூலை எழுத முன்வந்தேன். கற்றது சொற்பம். அறிந்தது மிக மிகச் சொற்பம்.

பணம், பொருள், புகழ் தேடவேண்டுமென்பதல்ல என் இலட்சியம். சமூகத்துக்குச் செய்யும் சிறு தொண்டேயிது.

மனித உருவங்களை அதிகம் கேடயங்களாக்கவில்லை. பட்சிகளை மிருகங்களை, ஊர்வனவுகளை கூடுதலாகக் கதாபாத்திரங்களாக்கியுள்ளேன்.

இதில், இலட்சியம், உண்மை, நீதி, நியாயம், பண்பு என்பன மலிவாய்க் கிடக்கின்றன.

நோக்குங்கள், சிந்தனை செய்யுங்கள். ஏற்றதைப் பிடித்து சிறப்பாய் வாழ முற்படுங்கள். இதுவே என் வேண்டுகோள்.

வணக்கம்

ஒப்பம். **இராசவல்லவன் இராசயோகன்**

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை
17. பங்குனி, 1999:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியம்

திரு. எஸ். நடராசா ( எஸ். என். ஆர், )
Retired Art Master & Artist. ( S. N. R.)

*( Teacher Certificate in Art of Sri Lanka*
*&*
*Teacher Certificate in fine Arts & Crafts of Madras India )*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T. Vythilinkam S. L. A. S.
Addl. Government Agent.
Jaffna Distrist.
01-03-99.

# அணிந்துரை

சிந்தனை செய்மனமே, என்ற தலைப்பில், திரு. இராசயோகன் எழுதிய, உருவகக்கதைகளை வாசிக்கும் வாய்ப்புக்கிடைத்தது. வெகு அருமையாக ஆக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பில் எட்டு ஆக்கங்கள் உள்ளன வாழ்க்கையில் நாம் காணும் பிராணிகளை மையமாக வைத்து இராசயோகன் இந்த உருவகக்கதைகளை எழுதியுள்ளார். இயற்கையாக அமைந்த பிராணிகள் அவற்றின் செயற்பாடுகள், செயற்பாடுகள் எவ்வாறு அமையவேண்டும், அவை பிழைத்தால் என்ன விபரீதம் இடம்பெறும் என்றும், விடயங்களை எழுத, வாசிப்பவரை, சிந்திக்க வைக்கும் முயற்சியில் இராசயோகன் வெற்றி கண்டுள்ளார். பிராணிகள் தம்முள் வெகு சாதாரணமாக உரையாடுகின்றன. அதில் நயமிருக்கின்றன. சுவையாகவும் உள்ளன. சில சமயம் சிரிப்பையும் கொண்டு வருகின்றன. அத்துடன் ஒரு வித ஆவலையும் — அதாவது இனி என்ன நடக்கப்போகிறது என்ற ஆவலையும் சில இடங்களில் வெளிப்படுத்துகின்றன.

முக்கியமாக இந்த உருவகக்கதைகளைப் படிக்கும் சிறுவர், சிறுமியர் தம்மை மறந்து வாசிக்க வைக்கும் திறன் இவற்றில் அடங்கியுள்ளன. ஏன் பெரியவருக்கும் வாசித்து ரசிக்கத்தக்கதாய்த்தான் இராசயோகன் எழுதியுள்ளார்.

திரு. இராசயோகனை எனக்கு நன்கு தெரியும், கிராமசேவகர் பணிகளையும் கவனித்துக் கொண்டு இந்த எழுத்துத்துறையிலும் பிரகாசித்துள்ளார். நன்கு சிந்திக்கின்றார். தனது கன்னி முயற்சியில் வெற்றி கண்டுள்ளார். தினமும் தனது தொழிலின் மூலம் பல கதாபாத்திரங்களைச் சந்திக்கும் திரு. இராசயோகன் எதிர்காலத்தில் நல்ல சிறு கதைகளை எழுதமுடியும். முயற்சி கொண்டால் வெற்றி பெற முடியும்.

எனது வாழ்த்துக்கள்.

ஒப்பம், து. வைத்திலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இவ்வுலகத்திலே நாம் புலன்களால் பெறும் இன்பத்தைவிட அறிவினால் பெறும் இன்பம் உயர்ந்தது; சிறந்தது; நீடு நிலைப்பது. இலக்கிய இன்பம் இத்தகையதே ஆகும்.

சிறந்த நட்பைப் போன்றது உயர்ந்த நூல். "நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தொறும் பண்புடையார் தொடர்பு" என்ற குறள் இத்தகைய உயர்ந்த நூல்களைப் பற்றியே பேசுகிறது.

ஆனால் இக்காலத்தில் தமிழில் உயர்ந்த நூல்கள் தோன்றுவது ஒப்பிட்டளவில் குறைவாகவே உள்ளது. சிறு கதைத் தொகுதிகள், கவிதைத் தொகுதிகள், நாவல்கள், சமய நூல்கள் என ஓரளவு அச்சாகின்ற நூல்களும் வளர்ந்தோருக்குப் பொருத்தமானவையாகவே உள்ளன.

குழந்தைகளுடைய மொழி விருத்தியும், அவர்களது கற்பனைச் செழுமையும் வாசிப்பு பெரும் பங்கை வகிக்கிற தாயினும் குழந்தைகள் வாசிக்கப் பொருத்தமான நூல்களைத் தேடிப் பிடிப்பது முயற் கொம்பாகவே உள்ளது. எமது நாட்டின் பிரபலமான சிறந்த தமிழ் எழுத்தாளர்கள் பலரும் கூடக் குழந்தைகள் பக்கம் திரும்பிப் பார்க்காதிருப்பது எமது துரதிர்ஷ்டம்.

இந்த நிலையில் கிராம சேவையாளர் திரு. இ. இராயோகன் அவர்கள் தமது சமூக சேவையுடன், எழுத்து மூலம் குழந்தைகளுக்கும் சேவையாற்ற முன் வருவது பாராட்டப்படவேண்டிய விடயமாகும். அவரது எழுத்தில் குழந்தைகள் பெரிதும் விரும்பக்கூடிய யதார்த்த விரோதப் பண்பும் கற்பனை உயர்வும் நிறைந்துள்ளன.

இத்தொகுதி பாடசாலைகளின் நூலகங்கள் தோறும் காணப்படும். காணப்படவேண்டும்! எமது பிள்ளைகள் வாசித்துக் குதூகலிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

ஒப்பம், திருமதி. கோகிலா மகேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம்
வலி - தென்மேற்கு
சண்டிலிப்பாய்.
26-2-99

# ஆசியுரை

"சிந்தனை செய் மனமே" என்ற உருவகக் கதைகள் கொண்ட நூலிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய காலத்திற்கேற்ப உயிரினங்கள் மூலமாக சிந்தனைகளை வெளிப் படுத்துவதாக இது அமைந்துள்ளது. இது சிறுவர்கள் மிகவும் இலகுவாக விளங்கக் கூடிய முறையில் அமைந்துள்ளது.

இந்நூல் திரு. இராசயோகன் அவர்களால் முதன் முறையாக எழுதி வெளிப்படுகிறது. இம் முயற்சி மிகவும் வரவேற்கப்படக் கூடியது இவருடைய இவ்முயற்சியினால் மேலும் பல நூல்கள் தொடர்ந்து வர வேண்டு மென்று எதிர்பார்க்கின்றோம். இந் நூலினாலே சிறுவர்கள் மிகவும் பயனடைவார்க ளென்பது உறுதி. இவருடைய இவ் முயற்சி மேலும் தொடர்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டி எமது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒப்பம் நா. வேதநாயகன்
பிரதேச செயலர்,
வலி - தென்மேற்கு,
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

இன்றைய மழலைகள் தேசத்தின் நாளைய இனிய தலைவர்கள். அறிவு, ஆன்மீகத்தினூடாக அன்போடு மழலைகளிடம் விதைக்கப்படுதல் அவசியம். நீதிக்கதைகள், நல்லுரைகள், உள்ளம் பண்படக்கூடிய இனிய பாடல்கள் என்பன மனதினைப் பண்படுத்தவல்லன. இந்த வகையில் எட்டு நீதிக் கதைகள் ' சிந் தனை செய் மனமே " மூலம் தந்துள்ளவர் எழுத்துத்துறைக்குப் புதியவரானாலும், ஆழ்ந்த அனுபவஞானமுடையவர். மானிப்பாய் மெமோறியல் அன்னையின் புதல்வரான இவ்வெழுத்தாளர் இராசவல்லவன் இராசயோகன் அவர்களது இக்கன்னி முயற்சி பாராட்டத்தக்கது. என்னுடன் கற்றவர். என்பதிலும் ஒரு மகிழ்ச்சி. நாடு போற்றும் எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் அவர்களும் அணிந்துரை வழங்கியிருப்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி,

புதிய எழுத்தாளரின் முயற்சிக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளதாக உணருகிறேன். பாடசாலை மாணவர் பயன்பெற வல்லதொரு ஆக்கம் இது என்பதால், கல்வியுலகம் இரு கரம் நீட்டி வரவேற்கும் என்பது திண்ணம். வளர்க பணி என வாழ்த்தி நிற்கிறேன்.

ஒப்பம், அ. மு. அருணாசலம்

அதிபர்
யா / மானிப்பாய்
மெமோறியல் ஆங்கில பாடசாலை

# பதிப்பாளர் உரை

எனது கணவரின் பெற்றோர்களான, காலம் சென்ற, மதிப்பார்ந்த திரு. ப. இராசவல்லவன் திருமதி. இ. யோகமலர் ஆகியோரின் நினைவாகவும், நான் அவர்கள் மேல், கொண்ட அன்பின் பிரதிபலிப்பாகவும் இருக்க, "சிந்தனை செய் மனமே" என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட எண்ணினேன்.

அதன் பிரகாரம், பொருளாதார நெருக்கடியையும், காலக்கொடுமையையும், பொருட்படுத்தாது. இச்சிறு நூலைப் பதிப்பிக்க முற்பட்டேன்.

இதை உருவாக்க, உறுதுணை புரிந்த எனது கணவரும், கிராம அலுவலருமான திரு. இராசவல்லவன், இராசயோகன் அவர்களுக்கும், நூலை அலங்கரிக்கும் முகப்புச் சித்திரம் வரைந்து உதவிய சிறந்த சித்திர ஆசிரியரும், ஓவியருமான திரு. எஸ். நடராசா (எஸ். என். ஆர்) அவர்களுக்கும், என்றும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், அணிந்துரை, ஆசியுரை அளித்தவர்களான, யாழ் / மேலதிக அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கம் அவர்களுக்கும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. நா வேதநாயகன் அவர்களுக்கும், அதிபர் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களுக்கும், யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை அதிபர் திரு. அ. மு. அருணாசலம் அவர்களுக்கும், மற்றும் பதிப்பிக்க உதவிய அனைவர்களுக்கும் மனமுவந்த நன்றி பல கூறுகிறேன்.

இதன் மூலம் அடையக்கூடிய நன்மைகளை அடைந்து இன்புறுமாறு யாவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நன்றி

வணக்கம்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை,
17, பங்குனி, 1999

ஒப்பம், **திருமதி. பூமா இராசயோகன்**
பதிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " மைனாக் கூட்டமும் சருகாமையும் "

ஒரு ஊரில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அம்மரம் எக்காலத்திலும் பச்சை பசேலென்று செழித்திருக்கும். ஒவ்வொரு வருடமும் பூத்துக் குலுங்குவதில் தவறுவதில்லை. அத்துடன் நிறைவாகக் காய்த்து அழகிய கனிகளாக உருமாறும் எப்பொழுது இம்மரத்தில் காய்கள் கனியாகும் என்று அவ்வூர்ப் பறவைகள் எதிர்பார்த்திருக்கும். ஒவ்வொரு நாளும், அங்கு பறவைகள் வந்து இதைக்கவனித்துச் செல்லும். இவற்றுள் மைனாக் கூட்டம் மிக முக்கியமானதாகும்.

காய்கள் பழுக்கத் தொடங்கியதும் மைனாக் கூட்டங்கள் காலையிலிருந்து மாலைவரை அம்மரத்தை முற்றுகையிடத் தொடங்கின. பெரிய ஆரவாரத்துடன், கீச்சிட்டுக்கொண்டு, கிளைக்குக் கிளை தாவியும், கொப்புக்குக் கொப்பு பறந்தும் பழங்களைத்தேடி உண்டு மகிழ்ந்தன. மரத்தில் இருந்த காய்கள், பழங்களெல்லாம் அழகிய சிவப்பாக இருந்தமையால் மைனாக்கள் காயையும், பழமென்றே கொத்திக் கீழே விழுத்தின. இப்படியாக மரத்தில் இருந்த காய்களும், செங்காய்களும் மற்றும் பழங்களும் அநியாயமாகக் கீழே விழுந்தன.

அம்மரத்துக்குக் கீழுள்ள சருகுகளுக்குள் ஒரு சருகாமை வாழ்ந்து வந்தது. மரத்தில் இருந்து கொத்தி வீழ்த்தப்படும் காய்களைப்பார்த்து அது கவலைப்பட்டது. 'நாளைக்கு என்ன கிடைக்கும் என்ற யோசனை இல்லாமல் நடக்கின்றனவே பறவைகள்' என்று நினைத்து இதை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று எண்ணி மரத்தடியில் நின்று கொண்டு " நண்பர்களே! ... நண்பர்களே! கொஞ்சம் கேளுங்கள் " என்று உரக்கக் கத்தியது.

புதுவித சத்தத்தைக் கேட்ட மைனாக் கூட்டம் ஆரவாரத்தை நிறுத்தி அமைதியாகின. குரல் வந்த குறியை நோக்கிப் பார்த்தன. ஆமை தனது முன்னங் கால்களைத் தூக்கிக் கொண்டு கத்தியபடி நின்றதைக் கண்டன. உடனே மைனாக்கூட்டத்திற்குக் கோபம் வந்தது. " ஏ ஆமையே! எங்களால் கொத்தி வீழ்த்தப்படும் பழங்களையும், சருகுகளையும் உண்ணும் உனக்கு இவ்வளவு திமிரா! எவ்வளவு ஆரவாரத்துடனும், சந்தோசத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனும், நாங்கள் இருக்கும்போது நீ குழப்பிவிட்டாயே. நாங்கள் பறவைகள் எங்களைக் கட்டுப்படுத்துவதற்கு யாரும் இல்லை மரியாதையாக இங்கிருந்து போய்விடு. அல்லது உன்னைக் கலைத்துவிடுவோம்'' என்றன.

இதைக்கேட்ட ஆமைக்குச் சீற்றம் வரவில்லை. சற்றுநேரம் அமைதியாக இருந்து விட்டு, ''நண்பர்களே நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள் உங்களின் நன்மைக்காகவே எனக்குத் தெரிந்தவற்றைச் சொல்லுகிறேன். இவ்வுணவு உங்களுக்கு நாளைக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன் நான். ஒரு நாளைக்கு ஒருவருக்கு ஐந்து அல்லது ஆறு பழம் போதுமானதாகும். ஆனால் நீங்களோ இந்த அருமையான உணவை வீண்விரயம் செய்கிறீர்கள். கீழே விழும் பழங்களை உண்பதற்கு என்னைத் தவிர வேறு ஒருவரும் இங்கில்லை. எனக்குக்கூட ஒரு நாளைக்குப் பத்துப் பழம் போதுமானதாக இருக்கின்றது. ஆனால் நீங்களோ ஒரு நாளைக்கு பல ஆயிரத்திற்கு மேற்பட்ட பழங்களை வீண் விரயம் செய்கிறீர்கள். ஆகவே நீங்கள் மனச்சாட்சியின்படி நடந்துகொள்ளுங்கள். பழங்களைச் சுமந்து நிற்கும் மரத்தால் இதை ஒழுங்கிற்குக் கொண்டுவரமுடியாது. ஆகவே இன்றிலிருந்து நீங்கள் நல்லபடியாக நடந்துகொள்ளுங்கள்'' என்று கூறிற்று.

இவ்வுரையைச் செவிமடுக்காத மைனாக் கூட்டம் சட்டென்று ஆமையை நெருங்கி அதைத் தாக்கத்தொடங்கியது. கொத்தியும் உதைத்தும், சிறகாலடித்தும் ஆமையைக் கலைக்க முற்பட்டன. இவர்களின் தாக்கத்தைத்தாங்கமுடியாத ஆமை தனது தலையையும், கால்களையும் தன்னுடைய ஓட்டிற்குள் இழுத்து கல்லைப்போன்று இருந்தது. திடீரென ஆமை கல்லாய்ப்போனதை உணர்ந்த மைனாக் கூட்டம் ஆச்சரியம் அடைந்தது. போகிற போக்கைப் பார்த்தால் எங்களையும் ஆமை கல்லாக்கிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றெண்ணித் தலைதப்பினால் போதும் என்ற எண்ணத்தோடு பறந்து சென்றன.

இவற்றையெல்லாம் மரத்திலிருந்து அவதானித்துக்கொண்டிருந்த அணிலொன்று மரத்தில் இருந்து மெதுவாகக் கீழிறங்கி ஆமை நிற்கும் இடத்திற்கு வந்தது. வந்து ''ஆமையாரே ... ஆமையாரே சற்று வெளியே வாரும்'' என்று கூறியது. ஆமை முதலில் வரத்தயங்கியது. பின் குரலின் வித்தியாசத்தால் தலையை மெதுவாக வெளியே நீட்டிப் பார்த்தது. அணிலொன்று தன் முன் நிற்பதைக் கண்டு, ''இந்த மரத்தில் நிரந்தரமாய்க் குடியிருக்கும் நீயுமா என்னைத் தாக்கவந்தாய்?'' என்று கேட்டது.

அதற்கு அணில், ''நண்பா! நான் நடந்தவற்றை மரத்திலிருந்து பார்த்துக்கொண்டு இருந்தேன். என்னைப் பொறுத்தவரையில் உன்னில் தான் பிழையுள்ளது. ஆலமரத்தில் விளையும் காய்கள் வீணாக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இல்லையேல் அது உற்பத்தி செய்யும் பழங்களின் விதைகள் மரங்களாக வரின் இந்த உலகம் முழுவதும் ஆலமரங்களாகத்தான் இருக்கும். இதே போலவே எத்தனையோ மரங்கள் இவ்வுலகத்தில் இருந்தும் தங்களின் இனத்தை முழுமையாகப் பெருக்கிக் கொள்ள முடியாது இயற்கையாகவே அழிகின்றன. இது நடைமுறைச்சாத்தியமாக இருக்கமுடியாது என்பதற்காகவே இறைவன் இப்படி ஒரு நிலையைக்கொடுத்திருக்கின்றான். இதனால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் இறைவன் பூமியில் செய்கிறான்.

ஆலமரத்தைப் படைத்தும், அது பின் பெரிய மரமாக வளர்ந்துவரும் வரை காத்தும், அந்தமரங்களில் இலட்சம்பழங்கள் உண்டாகுவதற்குஅருளியும், விழுந்தபழங்கள் முளைக்காது அழுகியும், சண்டைக்குச் சென்றமைனாக் கூட்டத்தின் ஆணவத்தை மறைத்தும் இறைவன் காட்டுகின்றான், அறியாமையால் எமது மத்தியில் எத்தனையோ விபரீதங்கள் நடைபெறுகின்றன. இவற்றில் சில ஆதாரங்களோடு அறியக் கூடியதாய் உள்ளது. இவற்றில் இதுவும் ஒன்று என்று கூறிச் சென்றது.

'' இறைவன் இயற்கையினூடாக எத்தனையோ கருமங்களை மேற்கொண்டுள்ளார் எமக்கு இவை புரியாமல் இருக்கின்றது. எதுவும் நன்றாக அறிந்தபின்தான் செய்யவேண்டும் என்பதை இதன் மூலம் உணர்ந்துகொண்டேன் '' என்று எண்ணி ஆமை அமைதியானது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஓணானும் கொள்ளி எறும்பும்"

ஒரு வளவில் உள்ள மரமொன்றில், ஒரு ஓணான் வசித்து வந்தது. அது அவ்வளவிலுள்ள பூச்சி, புழுக்கள், கறையான், எறும்பு போன்ற வற்றை உண்டு உறுதி குறையாது மகிழ்ச்சியாக இருந்தது. இதற்கு எதிரி என்று அந்த வளவில் யாரும் இல்லை. இருந்தாலும் அவ்வீட்டு நாய் சில வேளைகளில் அம்மரப்பக்கம் வந்தால், ஓணான் மறைந்துவிடுவதால் நாய், பிரச்சினைக்குச் செல்வதில்லை காலையில் இருந்து மலைவரை மரத் தடியில் இருந்து கொண்டு உணவைச் சுலபமாகப் பெற்றுக்கொள்ளும். இரவு நேரத்தில் மரத்துக்குப் பக்கத்திலுள்ள புற்றுக்குள் சென்று இரவை இலேசாகக் கழிக்கும்.

இப்படியாக அது வாழ்ந்து வரும் காலத்தில், ஒரு நாள் உணவு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது நண்பகல்வரை எதுவித உணவும் கிடைக்கவில்லை. இதனால் அதற்குப் பசி ஏற்பட்டு வளவில் நாலா பக்கமும் உணவு தேடி அலையக் கிளம்பியது. பிரச்சினையே இல்லாமல் இருந்த அதற்கு ஒருநேர உணவு கிடைக்காமை பெரிய வேதனையைக் கொடுத்தது. என்னால் பசியைத் தாங்க முடியவில்லையே. இப்படி நாட்கள் பல சென்றால் எனது நிலை என்னவாகும்? உணவு கிடைக்கும்போது சேமித்து வைப்பதென்பது எமக்குத் தெரியாத ஒன்று. சில பிராணிகளுக்குச் சேமித்து வைக்கும் பழக்கத்தை இறைவன் இயற்கை யாகவே கொடுத்துள்ளான். எலி, எறும்பு போன்றவை தானியங்களை உண்பதால் அவற்றை பழுதடையாது சேமித்து வைக்க முடிகின்றது. ஆனால் பூச்சி புழுக்கள் உயிரினங்களாக இருப்பதால் அவற்றைச் சேமித்து வைக்கமுடியாது என்ற முடிவிற்கு வந்தது.

இப்படியாக அது சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, கொள்ளி எறும் பொன்று மரத்தை நோக்கி விரைவாக வருவதைக் கண்டது. உன்னிப்பாக அதைக் கவனித்து, ''இது என்ன? எறும்பு வர்க்கத்தில் வித்தியாசமாக இருக்கிறதே! வேகம் கூடியதாகவும், வடிவம் வேறானதாகவும் உள்ளதே! எது என்னவாக இருந்தாலும், இந்த ஆராய்ச்சி வேண்டாம். பசி வந்தால் பத்தும் பறந்து போகும்'' என்று எண்ணி உடன் அவ்விடம் சென்று தனது நாக்கை அதன்மேல் எறிந்து பற்றி 'லபக்' என்று விழுங்கியது. இது ஒரு கணப்பொழுதில் நடந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓணான் எதிர்பார்த்தது போல் அவ்வுணவு உட்செல்லவில்லை அது தொண்டையின் அடிப்பாகத்தில் அப்படியே நின்று விட்டது போன்ற உணர்வு ஏற்படவே அதை உட்செலுத்துவதற்காகப் பல முறை முயற்சி செய்தது. சற்று நேரத்தில் அவ்விடத்தில் இருந்து முதலில் மெல்லிய நோ ஏற்பட்டுப் பின்னர் படிப்படியாகக் கூடிக்கொண்டு வருவதை உணர்ந்தது. இது என்ன வில்லங்கம்! இப்படி இவ்வளவு காலத்திலும் நடந்ததில்லையே. உட்போகாவிட்டாலும் வெளியேயாவது எடுத்துவிடவேண்டும் என்று எண்ணிப் பலமுறை தனது வாயைத் திறந்து செருமியது, தும்மியது. வேதனை பலமடங்கு கூடவே செய்வதறியாது அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தது. மரத்தில் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தது பின் புற்றுக்குள் ஓடியது. வெளியே பலமுறை வந்து தனது வாயைத் திறந்து எப்படியாயினும் இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்று நினைத்தது. ஆனால் முடியவில்லை நாம் தனியாக வாழப் பழக்கப்பட்டவர்கள். இந்த வில்லங்கத்திற்கு யார் உதவப்போகிறார்கள் என நினைத்துத் துன்பப்பட்டது. கடைசிமுறையாகத் தனது தொண்டையில் அதிர்வை ஏற்படுத்துவதற்காகத் தலையைப் பலமுறை மரத்தில் அடித்தும், உராய்ந்தும் பார்த்தது. இதனால் எறும்பு தனது பிடி தளரப்போவதை உணர்ந்து மேலும் தனது பலத்தைக் கூட்டி அதன் தொண்டையை இறுக்கிப் பிடித்துக்கொண்டது. இதனால் ஓணானுக்கு அதிக நோ ஏற்படவே எப்படியாயினும் இவ் வேதனையில் இருந்து நீங்குவதற்கு வில்லங்கம் கொடுப்பவருடன் தொடர்பு கொள்வதுதான் புத்திசாலித்தனமான செயல் எனத் தீர்மானித்தது.

மெதுவாக ''நண்பரே! நீங்கள் தரும் வேதனையை என்னால் இனித் தாங்கமுடியாதுள்ளது. இந்த உலகத்தில் எத்தனையோ இயற்கை விபரீதங்கள்ஏற்படுகின்றன. இவற்றை உணர்ந்துகொண்டால் நீங்கள் இப்படி நடக்க மாட்டீர்கள். காட்டிலும் சரி, நாட்டிலும் சரி, இந்த விபரீதங்கள் ஏற்படவே செய்கின்றன. மானைக் கொன்று உண்ணும் சிங்கம் காட்டில்தான் வாழுகின்றது. சிங்கம் மானைக் கொல்வதால் மான் காட்டைவிட்டு ஓடுவதில்லை. அல்லது அவை சிங்கத்தைக் கொல்வதற்கு முற்படுவதும் இல்லை. வீட்டை எடுத்துக்கொண்டாலும் பூனையும் எலியும் வீட்டில்தான் வாழுகின்றன. ஆனால் பூனை எலியைக் கொல்கின்றது. இதனால் எலி வீட்டைவிட்டுச் செல்வதுமில்லை. பூனையைக் கொல்ல முற்படுவதும் இல்லை. இவை இயற்கையின் நியதி. இதைத்தான் நானும் செய்தேன் ஆனால் நீயோ இவற்றை விளங்காமல் எனது உயிரைப்போக்க முயற்சி செய்கிறாய் போலும். உனது பிடியைத் தளர்த்தாது விட்டால் சொற்ப நேரத்தில் நான் இறந்து விடுவேன். நான் இறந்தால், இவ்வுலகில் வாழும் இலட்சக் கணக்கான ஓணான்களும் இறந்துவிடும் என நினைக்காதே. ஓணான் பூச்சி புழுக்களைத் தின்னாமல் வேறு பொருட்களை உண்ணும் என்றும் நினைக்காதே. புலி பசித்தாலும் புல் தின்னாது என்பதை அறியாயோ? உங்களைப்போன்றவர்களை உணவாக்கிக் கொள்வதற்காகவே எமக்கு மற்றைய பிராணிகளை விட ஒரு சக்தியை இறைவன் கூடுதலாகத் தந்துள்ளார் என்பதை அறியாயோ? எமது எண்ணப்படி நிறத்தை மாற்றிக் கொள்ளும் தன்மை எமக்கு தான் உண்டு. நாம் இறக்கும்வரை இந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியைப் பிரயோகிக்க முடியும். இறைவன் இவற்றை இயற்கையாகவே எமக்குக் கொடுத்துள்ளார். தம்மைத்தாமே கொன்றும், தங்களால் அன்புடன் வளர்க்கப்படும் மிருகங்களைக் கொன்றும் உண்ணும் மனிதன் எங்களைத் தவறுதலாகப் பச்சோந்தி என்று வர்ணிக்கின்றான். கெட்ட மனிதர்களுக்கு எங்களை ஒப்பிடுகிறார்கள். உண்மையிலேயே நாம் கெட்டவர்கள் அல்லர். மனிதர்களுக்குக் கெடுதியை விளைவிக்கும் பூச்சி புழுக்களைத் தான் நாம் உணவாக்குகிறோம். மனிதர்களுக்குத் தீங்கு இழைத்ததும் இல்லை ஆனால் மனிதர்கள் நினைத்தால் எங்களைச் சுலபமாகக் கொன்றுவிடலாம். அவர்களும் அப்படிச் செய்வதும் இல்லை. ஆகவே என்னை இத்துன்பத்திலிருந்து நீக்கிவிடு! என்னை வாழவிடு நண்பா!'' என இரந்து கேட்டது.

அதற்கு எறும்பு, ''இப்போது நீ சொல்லும் அறிவுரைகளை வைத்துக்கொண்டு நல்ல நண்பனாக ஏற்றுக்கொள்ள முடியாது தேவைப்படும் பொழுது உதவுபவன் தான் உண்மையான நண்பன் என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு என்பதை நான் நன்றாக அறிவேன். என்னைக் கொன்று உண்ணவந்த ஒருவனை எப்படி நண்பனாக ஏற்றுக் கொள்வது? ஆழம் அறியாமல் காலை விடலாமா? இதை விட மடமை வேறு என்ன இருக்கின்றது. சதா எதிரிகளாக இருக்கும் கீரியையும் பாம்பையும் மனிதன் வளர்க்கின்றபோது அவை இரண்டும் ஒற்றுமையாக இருப்பதையும், நாயில் பூனைக்குட்டி பால் குடிப்பதையும், நாம் அதிசயமாகத்தான் பார்க்கிறோம். இவற்றை வைத்துக்கொண்டு கீரியும் பாம்பும் இயற்கையாக ஒற்றுமையானவை என்று கூறமுடியாது. அப்படி ஒற்றுமையாக இருந்தால், அதுவும் இயற்கை விபரீதமே'' என்று கூறி எறும்பு தனது நிலையில் இருந்து சற்றும் மாறவில்லை. இறைவன் அதற்குக் கொடுத்த அழுங்குப்பிடியில் இருந்து சற்றும் விலகவில்லை. தன்னைக் கொல்லவந்த எதிரியை அது வாழவிட விரும்பவில்லை சம்பாசணை முடிந்து சொற்ப நேரத்தில் ஓணான் மயக்கமடைந்து பின் மரணமடைந்தது

ஓணானின் உறுப்புக்கள் ஓய்ந்து விட்டதை அறிந்த எறும்பு எதிரியைக் கொன்று விட்டேன் என்று பெருமிதத்துடன் தனது பிடியைச் சற்றுத் தளர்த்திப்பார்த்தது. எதுவித பிரச்சனையும் இல்லை என அறிந்த எறும்பு இறந்த ஓணானின் திறந்த வாய்ப்பக்கமாக மெதுவாக வெளியே வந்து வேறு ஏதேனும் எதிரிகளும் உள்ளனரா என்று சற்றும் முற்றும் பார்த்தது பிரேதத்தைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை.

பலமணி நேரம் என்னைக் காணாமையினால் குப்பைமேட்டிலுள்ள உறவினர்கள் தேடப்போகிறார்கள் என்ற எண்ணத்துடன் மிக வேகமாகத் தனது இருப்பிடம் நோக்கி எறும்பு விரைந்தது. அக்குப்பைமேட்டில் தனது குஞ்சுகளுக்கு உணவு கொடுப்பதற்காக குப்பையைக் கிளறிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி ஒன்று நின்றது. விரைவாக வந்துகொண்டிருக்கும் இவ்வெறும்பைக் கண்டு அதை உணவாக்குவதற்காகக் கோழி ஓடிவந்தது. இதை உணர்ந்த எறும்பு பக்கத்திலுள்ள குப்பைக்குள் ஓடி மறையவே, கோழி அக்குப்பையைக் கடும் வேகத்துடன் கிளறியது. குப்பை விறாண்டியால் கிளறியது போல் குப்பை வேறாக, எறும்பு அம்பலமாய்த் தெரியவே இது கொள்ளி எறும்பு எனத் தீர்மானித்த கோழி பலமுறை தனது சொண்டினால் கொத்தி அதனைச் செயலிழக்கச் செய்தது. ஈற்றில் எறும்பு சாகவே அதனைத் தனது சொண்டினால் தூக்கி தன் குஞ்சுகளை அழைத்தது. தாயின் உணவிற்கான அழைப்பைக் கேட்ட குஞ்சுகள் ஆரவாரத்துடன் ஓடிச்சென்று அதன் சொண்டிலிருந்த உணவை அன்போடு பெற்றுக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாயும் வெளவாலும்"

நரேசின் தந்தைக்கு அவரின் நண்பர் ஒருவர் அழகான நாய்க்குட்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியிருந்தார். அதற்கு அவ்வீட்டுக்காரர் றெக்ஸ் என்ற பெயரைவைத்து மிக அன்பாக வளர்த்தார்கள். முட்டை, பால் மற்றும் மாமிசங்களை அது தாராளமாக உண்டு அதன்தோல் மினுமினுத் தது மாத்திரமன்றி அதன் உருவமே பார்ப்பதற்கு எழுச்சியாக இருந்தது. 'என்ன தவம் செய்தேன் என்று தெரியவில்லை, இவ்வுணவுகளை உண்ப தற்கு?' என்று நினைத்துப் பெருமைப்பட்டது. நரேசுடன் விளையாடுவ தில் அதற்கு மிகுந்த ஆர்வம். எப்பொழுது பாடசாலையில் இருந்து அவர் வருவார் என ஆவலாய் எதிர்பார்த்திருக்கும். நரேசைக் கண்டதும் மற்ற நாய்கள் தங்கள் எசமானைக்கண்டதும் செய்யும் செயல்களைவிட மூன்று மடங்கு பெரிதுபடுத்தியும், குரலை வேறுபடுத்தியும் தனது அன்பைத் தெரிவிக்கும். அதைச் சமாதானத்திற்குக் கொண்டுவருவதே நரேசுக்கு பெரும் பாடாயிருக்கும்.

இப்படியாக அது வளர்ந்து வரும்பொழுது யாரேனும் அபகரித்துச் சென்றுவிடுவார்கள் என்ற அச்சத்தினால் இரவில் அதனை அறைக்குள் பூட்டித்தங்களுடன் வைத்துக்கொள்வார்கள். நாயை வளர்ப்பது வீட்டுக் காவலுக்காகத்தான் என்பதை முற்றிலும் மறந்தனர் நரேஸ் குடும்பத்தினர். அதன்மேல் அன்புமிகுதியால் றெக்சின் பாதுகாப்பிற்காக எதை யும் செய்வதற்கு அவர்கள் சளைக்கவில்லை ஆனால் றெக்சோ வீட்டைக் காவல்செய்ய வேண்டும்.புதுமுகங்கள் வந்தால் அவர்களைக்கண்டுகுரைத்து வீட்டாருக்குத்தெரிவிக்க வேண்டும். அல்லது அவர்களைக் கடித்துப் பாடம் புகட்டவேண்டும் என்ற எண்ணத்திலேயே இருந்தது. ஆகவே தான் இரவில் ஏதும் சத்தம் கேட்டால் போதும், உடனே அவ்வோசை வந்த பக்கம் ஒரே பார்வையாகப் பார்க்கும். தனது இரு செவிகளையும் தூக்கி உன் னிப்பாகக் கேட்கும். தன்னை அறியாமலே பெரிய ஒலி எழுப்பிக் குரைக்க ஆரம்பிக்கும். அது சில வேளைகளில் சாமமாகவும் இருக்கலாம். இருந் தாலும் வீட்டுக்காரர் அதைப் பெரிதாக நினைப்பதில்லை. றெக்ஸ் எந்த நேரம் குரைத்தாலும் அது அவர்களுக்கு இன்பமாகவே இருந்ததினால் தற்செயலாக நித்திரை குலைந்தாலும் கூட "றெக்ஸ் பேசாமல் படு",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மட்டும் சொல்வார்கள். அடுத்தநாள் காலை எல்லோரும் சேர்ந்து இரவு நடந்த றெக்சின் செயலைப் பெரிதாகக் கதைத்து இன்புறுவார்கள்.

இப்படியாக நாட்கள் பல ஓடின. நரேசின் தந்தையார் ஒரு முறை சுகயீனமுற்றிருந்தார். வைத்தியம் செய்தும் நல்ல சுகம் வருவதாகத் தெரியவில்லை. நித்திரையும் அவருக்குக் குறைவாகவே இருந்தது. நித்திரைக்கான மருந்துகள் வைத்தியர் வழங்கியும் நல்ல பலன் கிடைக்கவில்லை, எதிர்பாராத விதமாக ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு முன்னரே அவர் படுக்கைக்குச் சென்று நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார். இதனால் அவ் வீட்டுக்காரர் மன நிம்மதிப்பட்டுக்கொண்டு எதுவித இடைஞ்சலும் கொடுக்காது அவர்களும் தூக்கத்துக்கு வழமையான நேரத்திற்கு முன்னரே சென்று தூங்கியும் விட்டனர். இவர்களின் தூக்கத்தால் றெக்சும் நரேசுடன் சென்று படுத்துவிட்டது. எல்லோரும் நன்றாகத் தூங்கியிருக்கும் வேளையில் பூனை ஒன்று வீட்டிற்கு வெளியே கத்தும் சத்தம் கேட்கவே நரேசுடன் படுத்திருந்த றெக்ஸ் துள்ளி எழுந்தது. தனது எசமானார் ஆழ்ந்த தூக்கத்தில் உள்ளார் என்றோ அல்லது நரேசின் தந்தையார் பல நாட்களாக உறக்கமில்லாது இன்று தான் நல்ல உறக்கத்தில் உள்ளார் என்றோ அது பார்க்கவில்லை. அப்படி அதுபார்த்திருந்தால் அதிசயமாகத்தான் இருந்திருக்கும்.

உடனே ஓசை பாய்ந்த திக்கு எது என்று தெரியாமல் பலத்த சத்தத்துடன் குரைத்தது மாத்திரமல்ல வீட்டிற்குள் நாலாபக்கமும் ஓடியது. வெளிக்கதவை திறப்பதற்காகத் தனது முன்னங்கால்களால் பறபற என்று விராண்டியது. திடீரென்று வீட்டிற்குள் ஏற்பட்ட அமைதியின்மையால் எல்லோரும் விழித்துக்கொண்டனர். நரேசுக்கும் தூக்கம் கலைந்தது. உடன் றெக்சைக் கூப்பிட்டுச் சமாதானப்படுத்தியும் அது விட்டபாடாய் இல்லை. தூக்கம் குலைந்து அமைதியை இழந்த நரேசின் தந்தையார் றெக்சின் மேல், கடும்சினம் கொண்டவராய் "எட சனி நாய் நித்திரையைக் குழப்பிவிட்டதே. எத்தனையோ நாட்களின் பின் வந்த அருமையான தூக்கத்தைத் தரித்திரம் ஆக்கிவிட்டதே!" என்று கூறி "மற்றவர்கள் நாயை வளர்ப்பது போல வீட்டிற்கு வெளியில் தான் விடவேண்டும். செத்தையைத் தூக்கி மெத்தையில் வைத்தால் எப்படி இருக்கும். இதன் உருவில் தான் என் இறப்பு அமையும் போலிருக்கிறதே" என்று சொல்லிக்கொண்டு படுக்கையில் இருந்து எழுந்து வந்து அதைப்பிடித்துக் கதவிற்கு வெளியே தள்ளி மீண்டும் கதவைச் சாத்திக்கொண்டு தனது கோபத்தைத் தீர்த்துக்கொண்டார்.

நரேசின் தந்தையாரின் கோபத்தால், வீட்டிலுள்ளோர் எதையும் கூறப் பயப்பட்டனர். அன்பாய் அமுதமாய் வளர்த்து அணைத்த அந்தச் செல்வத்தை அப்பா வெளியில் விட்டவிதம் வீட்டிலுள்ள மற்றவர்களுக்கு ஆறாத வேதனையாக இருந்தது. ஆகவே அன்று இரவு முழுவதும் றெக்சைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து இருந்தார்களே அன்றித் துயிலவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் வேதனைப்பட்டது போல், றெக்ஸ் துன்பப்பட்டது என்று மட்டும் நினைத்துவிடாதீர்கள். இப்பொழுதுதான் தனக்கு விடுதலை கிடைத்தது போன்ற உணர்வுடன் பூனையைக் கண்டுபிடிப்பதற்காக மிக வேகத்துடன் வீட்டைப் பலமுறை சுற்றி ஓடியது. வெளியில் பூனை நிற்குமா என்றெண்ணிப் படலையருகில் சென்று படலைக் கம்பிக்கிடையில் தலையைச் செருகி அங்குமிங்கும் ஆவேசமாகப் பார்த்தது. எங்கும் பூனையைக் காணவில்லை. மீண்டும் வளவுப்பக்கமாக ஓடிச் சுற்றும்முற்றும் பார்த்தது பூனையைக்காணாவிட்டாலும் அதனுடைய வேகம் குறைந்தபாடாய்த் தெரியவில்லை. பூனை சந்திக்காவிட்டாலும் வேறு ஏதேனும் சந்திக்குமா? என்ற ஆவேசத்துடன் செயல்பட்டுக்கொண்டிருந்தது றெக்ஸ் சுற்றில் வளவின் பின்பக்கமாகச் செல்லவே அங்கு ஒரு பெரிய இலுப்பை மரம் காய்த்துக் குலுங்கியிருந்ததையும். அதில் மாம்பழ வெளவால் கூட்டங்கள் அப்பழத்தை உண்பதற்கு முண்டி அடித்துக்கொண்டு கொப்பில் வந்து விழுவதையும், ஒருவருக்கொருவர் பயங்கரமாகக் கடிபடுவதையும், சத்தத்துடன் பறந்து செல்வதையும் கண்டது. பூனையைத் தேடிச்சென்ற றெக்ஸ் இக்காட்சியைப் பார்த்து அதிசயித்து, 'இது என்ன பறவைகள் இரவிலும் இப்படி இருப்பதா? புதுமையாக இருக்கிறதே'' என்று நினைந்துக்கொண்டு அவர்களின் செயலை உற்றுநோக்கிய வண்ணம் அந்த மரத்தின் கீழ்க் குவிக்கப்பட்டிருந்த குப்பையின் அருகில் போய்ப் படுத்துக்கொண்டது. றெக்சின் நிறமும், குப்பையின் நிறமும் ஒரே மாதிரியாக இருந்தமையால் மரத்தின் கிழ் ஒரு உருவம் உள்ளதே என்பதை வெளவால்கள் கவனிக்காமையால் அவை கலவரமடையவில்லை.

மேலும் வெளவால் கூட்டங்கள் அந்த அருமையான பழத்தை உண்பதற்கு முண்டியடித்துக்கொண்டு நின்றன. அங்கு ஒருவருக்கொருவர் கீர் கீர் என்ற ஒலியுடனும் கடிபட்டுக்கொண்டன. இவர்களின் சண்டையையும். சத்தத்தையும் விழிமூடாது பார்த்துக்கொண்டிருந்த றெக்சுக்குச் சற்றுப்பயமாகவும் இருந்தது. இம்மரத்தில் எவ்வளவோ பழமிருக்க இவ்வளவு சண்டையிடுகிறார்களே என்று ஆச்சரியப்பட்டது. இதைப்பார்த்தால் எங்களினமும் இதைத்தானே செய்கிறது. உணவிற்காக எமது இனமும் ஒருவருக்கொருவர் சண்டைதானே பிடிக்கிறோம். தாய், சேய், என்றோ சகோதரர் நல்ல நண்பர் என்றோ பார்ப்பதில்லையே. அதேபோலவே இவர்களும் உள்ளனரே என்று நினைத்துக்கொண்டு, ''எல்லாம் விடியட்டும் பின் பார்ப்போம். இப்பொழுது களைப்பாக இருக்கின்றது. இந்த இடத்திலே இளைப்பாறுவோம்'' என்று தீர்மானித்தது ஆனால் இலுப்பைமரத்திலிருந்த வெளவால்கள் இளைப்பாறுவதாகத் தெரியவில்லை. இப்போதும் அங்கு சண்டையே நடைபெற்றுக்கொண்டிருந்தது. இருந்தாற்போல் ஒரு கொப்பில் பயங்கரமாகச் சண்டை நடைபெற்றது போலிருந்தது. கொப்புகள் முறிவது போன்று சத்தம் கேட்டது. இலுப்பம்பழங்களும், காய்களும் சிதறிவிழுந்தன. பின் தொப்பென்று பனம்பழம் விழுவது போன்ற சத்தத்துடன் ஒரு வெளவ்வால் றெக்சுக்கு அருகில் விழுந்து துடிதுடித்துக் கொண்டிருந்தது. இதனால் கலவரமடைந்த றெக்ஸ் பயத்தினால் கத்திக்கொண்டு பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி ஓடியது. பின் தனது பலம் முழுவதையும் பாவித்து உரத்துக் குரைத்தது. இப்பயங்கர சத்தத்தைக் கேட்ட மரத்தில் இருந்த வெளவ்வால் கூட்டங்கள் தடபட என ஒலியெழுபிப்பிப் பறந்தோடின. சற்றுநேரத்தின் பின் மரத்தில் மயான அமைதி ஏற்படவே றெக்ஸ் மெல்ல மெல்லமாக விழுந்து கிடக்கும் அந்தப் பொருளின் அருகில் சென்றது.. அங்கு குற்றுயிருடன் தனது முகத்தை ஒத்த ஒரு உருவத்தைக் கண்டு அதன் அருகில் சென்று மணந்து பார்த்தது. ஒரு நாளும் அறியாத மணமாக இருந்தமையால் அதைக் கடிப்பதற்கு றெக்ஸ் முற்படவில்லை. அதை மெதுவாகக் கௌவ்விக்கொண்டு ஒரே ஓட்டமாக வீட்டின் முன்புறமுள்ள படிக்கட்டில் விரிக்கப்பட்டிருந்த சாக்கில் வைத்தது. றெக்ஸ் ஓடிவரும் பொழுது பட்ட காற்றினால் ஓரளவு மயக்கம் தெளிந்த வெவ்ளவால் நாயைப் பார்த்தது. எனது தலையைப்போன்ற உருவமாக இருக்கின்றதே. இது என்ன இயற்கையின் வடிவம்! வீட்டில் வளர்க்கப்படும் இதற்கும் என்றுமே இதனுடன் தொடர்பிலா எமக்கும் முகம் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகப் படைக்கப் பட்டுள்ளதே! என்ன ஆச்சரியம் என்று நினைத்து. மேலும் அதன் உருவத்தை உற்றுநோக்கியது. பின் றெக்சைப்பார்த்து, ''நண்பரே! உமது முகமும் எனது முகமும் ஒரேமாதிரியாக இருக்கின்றதே. இலுப்பைமரத்திற்குக் கீழுள்ள துப்பரவு அற்ற நிலத்திலிருந்து எனது உயிர்பிரியாமல் நல்ல மெத்தையில் கிடத்தியுள்ளீர். காயப்பட்டு செட்டையும் முறிந்ததால் எமது இனத்துடன் மீண்டும் சேர்வது இறைவனால் மறுக்கப்பட்டுள்ளது' இதனால் இறப்பது உறுதியாகிவிட்டது. எம்மை வஞ்சகமாக வலையின் மூலம் பிடித்துக்கொள்ளும் மனிதனைவிட நீர் எவ்வளவு பெரியவன் எம்மை என்றுமே அறியாத நீர் இப்படியாக நடந்துகொண்டமை எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நல்லதொரு நண்பனான உமது முன்னிலையில் மறைவதைப் பெரியபேறாகக் கருதுகிறேன். நான் இனி நிம்மதியாகவே மடியப்போகிறேன்..'' என்று கூறிச் சொற்பநேரத்தில் வெளவால் கண்ணை மூடியது. இதைக் கேட்டுக்கொண்டிருந்த றெக்சுக்கு நெஞ்சம் நெகிழ்ந்தது. மிகவும் கவலையுடன் அதன் அருகில் விடியும்வரை படுத்திருந்தது.

தூக்கமின்மையால் குழம்பியிருந்த நரேஸ், சேவலும், காக்கையும் மாறி மாறி ஒலிக்கும் ஓசையினால் விடிந்து விட்டது என்று முன் கதவை ஆவலுடன் திறந்து பார்த்தான். பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும்போது அழுதால் கொஞ்சம் நிம்மதி என்பது போல் நரேசிடம் ஓடி அவரைக்கட்டிப்பிடிப்பது போல் முன்னங்கால்கள் இரண்டாலும் அவரின் உடம்பை அப்படியே பிடித்து அழுது காட்டியது றெக்ஸ். தனது வாலை எவ்வளவு விசையாக ஆட்டமுடியுமோ, அதை எதுவித நிபந்தனையும் இன்றிச் செய்து காட்டியது. இதைப்பார்த்த நரேஸ் அதைக் கட்டியணைத்து முத்தங்கள் பல கொடுத்தான். பதிலுக்கு றெக்சும் தனது இரு செவிகளையும் மடித்து நரேசைப் பலமுறை கொஞ்சியது மாத்திரமன்றி அழுதும் காட்டியது. றெக்சின் அழுங்குரலைக்கேட்ட நரேசின் தந்தையார் வெளியில் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தபோது நரேஸ் றெக்சைத் தூக்கி அதன் தலையைத் தடவிச் சமா தானப்படுத்திக் கொண்டிருப்பதைக் கண்டு அவரின் மனமும் நெகிழ்ந்தது. அவரைக் கண்டதும் றெக்ஸ் தனது பின்னங்கால்களால் தன்னை விடும்படி நரேசிடம் கேட்கவே, நரேசும் அதனைக் கீழிறக்கிவிட, றெக்ஸ் வேகமாகத் தந்தையிடம் சென்று தனது அன்பைக்காட்டி அழுதது.

இந்த நிலையைச் சகிக்கமுடியாத நரேசின் தந்தையாரும் அதனைத் தூக்கி அணைத்து முத்தம் பல கொடுத்தார். என்ன துன்பத்தை நாம் செய் தாலும் நன்றி மறவாதவர்கள் தாங்கிக்கொள்வார்கள். நன்றி என்பது விலைமதிக்க முடியாத ஒரு செல்வம், என்பதை றெகசிடம் இருந்து கற்றுக்கொண்டேன் என்று நரேசின் தந்தையார் பெருமிதம் அடைந்தார்.

கடிகாயத்துடன் படியில் இறந்து கிடக்கும் வௌவாலைப் பார்த்து வீட்டிலுள்ள எல்லோரும் அதிசயப்பட்டனர். பறக்கும் இம்மிருகத்தை றெக்ஸ் எப்படிப்பிடித்தான் என்பதுதான் அவர்களுக்குப் புதிராக இருந் தது. இதை றெக்சிடம் இருந்து எவ்வாறு அறிவது? இயற்கையின் நியதியை ஆராயாமல் றெக்ஸ் எல்லாவற்றிலும் திறமைசாலி என்று அதைப் புகழ்ந்து கொண்டே இருந்தனர்.

# " கருநாகமும் சோலைக் குயிலும் "

அது ஒரு விவசாயக்கிராமம். அதைச்சுற்றிப் பற்றைக்காடுகள் வளர்ந்திருந்தன அங்குள்ள விவசாயிகள் கோழி வளர்ப்பிலும் ஈடுபட்டிருந்தனர். அப்பற்றைக்காட்டில் நரிகளின் நடமாட்டம் அதிகமாய் இருந்தது. அவைகள் கோழிகளைக் களவாகப்பிடித்து உண்டு மகிழ்ந்தன. அப்படியிருந்தும் ஒரு கருநாகம் வசித்து வந்தது.

அது மிக அவதானமாகத் தனது காரியங்களைச் செய்தமையால் நரிகளின் கண்களில் படாமல் பல காலம் வாழக்கூடியதாக இருந்தது. எப்படியாயினும் நிம்மதியற்ற வாழ்க்கையே அதற்கு! இதனால் இந்த ஊரையே விட்டு வேறு இடத்துக்குச் செல்லத் தீர்மானித்தது. நரிகளின் கண்ணுக்குள் எப்படிப் பஞ்சை வைப்பது? அதின் கண்கள் கூர்மையானவை. சுறுசுறுப்பானவை. அத்துடன் நரி தனியாக வாழாதது. அவர்களிடமிருந்து தப்பிச் செல்வதென்பது மறுபிறவி எடுப்பதைப் போலாகுமென்று எண்ணி, ' இவ்விடத்தை விட்டு எப்போது கிழம்புவேன்? அது எப்போது நடக்கும்? ' ' என்று ஏங்கிக்கொண்டிருந்தது பாம்பு.

அன்றொருநாள் எதிர்பாராத பெரும் மழை! கருமுகில்கள் புடை சூழத் தொடங்கின. பெருங்காற்று எதிரும் புதிருமாக வீசியது. மரங்களெல்லாம் தமது கொப்புகளைக் காற்று வந்த திசையெல்லாம் கட்டாயம் விட நேரிட்டது எங்கும் ஒரே சோ என்ற சத்தம். மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர். பறவைகள் மிருகங்கள் எல்லாம் உறைவிடம் தேடி விரைந்தன. சொற்பநேரத்தில் வெள்ளம் கரைபுரண்டு ஓடத்தொடங்கியது, கடும் தாகத்திற்குக் குளிர் நீர் கிடைத்தது போல நிம்மதி ஏற்படவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய நாகம் ஓடும் வெள்ளத்தில் துள்ளிப் பாய்ந்தது. நரிகள் எதுவும் காணாத வகையில் தலையை மாத்திரம் வெள்ளத்தின்மேல் நீட்டிக்கொண்டு நல்ல இடம் வரும்வரை வெள்ளத்தோடு வெள்ளமாக நீந்திக்கொண்டு சென்றது. ஒரு வயற்கரையை அடைந்ததும் மெதுவாகத் தண்ணீரில் இருந்து வெளியே வந்து ஒரு வரம்படியில் சற்று இளைப்பாறியது.

இக்கிராமம் எப்படிப்பட்டதோ தெரியாது என்ற சிந்தனையுடன் எப்படியும் முதலில் தப்பித்துக்கொள்வதற்காகப் பாதுகாப்பான இடமொன்றைத் தெரிவுசெய்யச் சுற்றும் முற்றும் அவதானத்துடன் பார்த்தது' மழை வந்த அதிஷ்டம் போலும் பெரிய கறையான் புற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று வரம்பின் முடிவில் இருப்பதைக்கண்டு அங்குசென்று பலவழிகளிலும் அது வசதியாக இருப்பதைப்பார்த்து மகிழ்ந்தது. இனி எனக்கு நல்ல காலம் பிறந்துள்ளது எனவும் எண்ணி மகிழ்ந்தது.

இப்படியாகப் பல நாட்கள் ஓடின. முன்னைய ஊரைப்போல் இங்கு கீரியின் நடமாட்டமே இல்லை. அதற்கு விருப்பமான உணவுகளாகிய எலிகள் தவளைகள் போன்றவை தாராளமாகக் கிடைத்தன. பயமின்றி உணவு உண்ணக்கூடிய நிலை மற்றும் பிராணிகள் தன்னைக்கண்டு ஒதுங்கியமை போன்ற செயல்களால் பாம்புக்கு மென்மேலும் மகிழ்ச்சி பொங்கித் தேகமும் குளு குளு என்று வளர்ந்தது. படமும் பெருத்தது. சில வேளை, படத்தை விரித்தும், பயங்கரமாகச் சீறியும் காட்டியது

எல்லாம் நல்லபடியாக அமையவே பாம்புக்குப்பழைய நினைவுகள் மறையத்தொடங்கின. இடப் பெயர்வால் அனேகமானோருக்குக்கஷ்டம் தான் ஏற்படும். ஒரு சிலருக்கு அதிர்ஷ்டம் கிடைப்பதுண்டு. கருநாகத்திற்கு அதிர்ஷ்டம்தான் கிடைத்திருக்க வேண்டும். இப்படியாக ஒரு நாள் பாம்புக்கு ஒரு ஆணெலி வகையாக மாட்டிக்கொண்டது. அதனை உயிருடன் விழுங்கியும் விட்டது. அந்த நிம்மதியில் வரம்பொன்றில் நிமிர்ந்தபடி மல்லாக்காகக் கிடந்து சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டிருந்த அந்த நேரம் வீண்வம்புக்கும் போகவேண்டும் போலும் இருந்தது. அவ்வேளையில் வயல்பக்கமாக இருந்த மாமரத்தை நோக்கிச் சோலைக்குயிலொன்று பறந்து வந்து ஒரு கொப்பிலிருந்து கூவ ஆரம்பித்தது ஆணவத்தை அணைத்திருந்த அந்த நாகத்துக்குக் குயிலின் இனிமையான ஓசை அடிவாங்கும் கழுதை கத்துவது போலிருந்தது. ஆகவே அதைச்சகிக்க முடியாமல் கர்வமடைந்தது.

" ஏய் குயிலே நீ இனிமையாகப் பாடி மற்றவர்களை மகிழ்விக்கிறாய் என நினைக்காதே. அப்படித்தான் உனது குரலை இனிமையாக எடுத்துக்கொண்டாலும். நீ உனது பிறப்பின் ஆரம்பத்திலும் பின்னர் உனது வளர்ப்பிலும் செய்யும் தவறுகளை யார் சொல்லிக்கொள்கிறார்கள்? அறிதலிப் பிள்ளைபோல் அல்லவா நீ வளர்க்கப்படுகிறாய்! இரவல் கூட்டில் முட்டைகளை இட்டு உனது இனத்தைப் பெருக்குகிறாய். தந்திரத்தில் சிறந்த காக்கையையே நீ ஏமாற்றுகிறாய். அதன் கூட்டில் கள்ளத்தனமாக முட்டையிடுவது மாத்திரமல்ல, அவர்களைக்கொண்டே உனது குஞ்சுகளுக்கு உணவும் கொடுக்கச்செய்கிறாய்.

குஞ்சாய் இருக்கும்போது காக்கைக் குஞ்சுபோல் பாசாங்கு செய்து ஏமாற்றி அதன் அரவணைப்பில் சுகத்தைப் பெறுகிறாய். பின் பறக்கும் தன்மையடைந்ததும் கூட்டிலிருந்து வெளியேறும் குஞ்சுகளைப் பெற்றோர் என்று அணைக்கிறாயா? அல்லது ஒருபிடி உணவாவது கொடுத்து மகிழ்கிறாயா? எனக்கென்ன என்று மாற்றான் தாய்போல் அல்லவா நடக்கிறாய்! இந்த வண்டவாளங்கள் தெரியாத கவிஞர், புலவர், எழுத்தாளர் எல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோரும் உனது குரலை வர்ணித்து எத்தனையோ படைப்புக்களை ஏற் படுத்தியுள்ளனரே! குரல் வளத்தை வைத்துக்கொண்டு நீ நல்லவன் என்று மட்டும் எண்ணாதே! என்று ஏளனமாகக் கேட்டது.

இதைக்கேட்ட குயில் மூக்கு வெட்டப்பட்ட சூர்ப்பனகைபோல் அவமானப்படவில்லை. ''நாகமே! நீ சொல்வது உண்மைதான். இவ்வள வும் நாங்கள் செய்தாலும் நீதியாகத்தான் நடக்கிறோம். மற்றவர்களின் வீட்டில் முட்டையிடுகிறோம். ஆனால் அவ்வீட்டை முற்றாகக் கைப்பற்றுவ தில்லை. அல்லது அவ்வீட்டுக்காரரைக் கலைப்பதும் இல்லை. முட்டை யிடுவதற்குக் குறிக்கப்பட்ட நாள்கள் மாத்திரந்தான் அதைப் பயன்படுத்து வோம். பின்னர் வெளியேறி உரியவர் அனுபவிக்க விடுகிறோம். குஞ்சு களாய் காக்கையின் அரவணைப்பில் இருக்கும்போது அவர்களின் பிள்ளை களாகவே வாழ்கிறோம். அவர்கள் கொடுக்கும் பூச்சி, புழுக்கள், மற்றும் அழுகிய மாமிசங்களை எமது சகோதரக் காக்கைக் குஞ்சுகளுடன் மகிழ்வோடு உண்ணுகிறோம். இவ்வளவும் எமது அறியாமைப் பருவத்தில் நடைபெறுகின்றன.

பின்னர் முதிர்ச்சி அடைந்ததும். இவ்வுணவுகளை வெறுக்கிறோம். புலால் உண்ணும் பழக்கத்தை அறவே விரும்பாமையினால் காக்கை அன்னையிடம் எமது குரலைக் காட்டியதும் அவர்கள் எங்களை விரட்டி விடுகிறார்கள். மீண்டும் நாங்கள் அவர்களுக்கு இடைஞ்சல் கொடுக் காமல் தனியாகப் பழவகைகளை உண்டு வாழ்கிறோம். எங்களால் எந்த உயிரினமும் இடைஞ்சல் படுவதும் இல்லை. அல்லது நாம் எந்த உயிரையும் கொன்று உண்பதும் இல்லை. இதன் மூலம் ''தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்'' என்ற பழமொழிக்குச் சவாலாக வளர்கிறோம்

எம்மோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது நீ எவ்வளவு கொடூரமான வன். உன்னைக் கண்டாலே பயங்கரமாகவே இருக்கும். ''பாம்பென்றாலே படையும் நடுங்கும்'' என்பார்கள். உயிருடனே விழுங்கும் கொடூரமான செய்கையைச் செய்பவன் நீ. எனது வாயிலே மற்றவர்களை மகிழ்விக்கும் குரலைத்தந்த இறைவன் உனது வாயிலே பிறரைத் துன்பப்படுத்தும் கொடூரமான நஞ்சை அல்லவா, கொடுத்துள்ளார்! இதையாவது நீ நன்கு அறிவாயா?

எம்மைக் குறைசொல்லும் நீ எங்கு வாழ்கிறாய்? பலவருடகாலம் தமது உழைப்பால் கட்டிய கறையானின் வீட்டில அத்துமீறிக் குடியிருந்து கொண்டு அவர்களையும், அவர்கள் பாதுகாப்பாக வைத்திருக்கும் இராணி யையும் கொன்று ஏப்பம் விடுகிறாய். அவர்களின் இனத்தையே அடியோடு ஆழித்துவிடுகிறாய். உன்னால் தீண்டப்பட்டவர்கள் தப்புவதே அத்தி பூத்தல் போலிருக்கும். இவ்வளவு கொடூரமான ஒரு உயிரினத்தைக் கடவுள் ஏன் படைத்தார்? என்பதுதான் புரியவில்லை. இதனுடன் பேசிக் கொண்டிருப்பதே வீண்நேரம் எனக் கூறி உற்சாகமாகப் பாடிக்கொண்டு குயில் பறந்து சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப்பார்த்த கருநாகம் மிகவும் கோபத்துடன் படமெடுத்துச் சீறியது. ஆனாலும் சிறிது நேரத்தில் தனது செயல்களைச் சிந்தித்து வெட்கமடைந்தது. எனது வாழ்க்கையோடு பார்க்கும்போது குயிலின் நிலை எவ்வளவோ மேல் என எண்ணியது. இவ்விடம் வந்தமையால் நல்ல புத்திமதி கிடைத்தது என நினைத்துக்கொண்டு இயற்கையின் வடிவம் இப்படியாகி விட்டதே! எனது குணத்தை மாற்ற முடியுமா? என்றெண்ணி அந்நிய வீட்டில் அதிகாரம் செய்ய அருகிலிருந்த புற்றில் புகுந்துகொண்டது.

மற்றவர் செய்யும் சிறிய பிழைகளை ஆராயும் அளவிற்குத் தாம் செய்யும் பாரிய பிழைகள் தென்படுவதில்லை.

—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக் கொக்கும் கடுக்காய் நண்டும்

குயிலுக்குத்தானே கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கத்தெரியாது. ஆனால் வெள்ளை கொக்கு இது எல்லாம் நல்லாகத் தெரியும். அதனாலேதான் அவை சுள்ளிகளையும், தும்பு, பஞ்சு போன்ற பொருட்களையும் காவிக்கொண்டு பெரிய மர உச்சிக் கொப்புகளின் இடைகளில் தமக்கு வசதியாக அழகான கூடுகளைக் கட்டி அங்கு முட்டைகளையும் இட்டுக் குஞ்சு பொரித்துத் தமது இனங்களைப் பெருக்கிக் கொள்கின்றன. பெரும் மழை, காற்று வந்தாலும் கொக்குகள் பாதிப் படைவதில்லை. ஒவ்வொருவருடமும் புதுப்புது அழகான வீடுகளை அமைப்பது என்பது அவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட கொடை ஆகும்.

இப்படியாக வெள்ளைக்கொக்கு ஒன்று கடற்கரையை அண்டிய வாகைமரத்தில் கூடுகட்டி வாழ்ந்துவந்தது. பக்கத்திலே கடற்கரை இருந்தமையால் அது தூர இடங்களுக்குச் செல்லாது அங்கேயே தனது உணவான மீன் குஞ்சு, கடல் நத்தை மற்றும் சேறு உள்ள இடங்களில் உற்பத்தியாகும் பூச்சி, புழுக்களை உண்டு மகிழ்ந்தது. சில சந்தர்ப்பங்களில் இவ்விடங்களில் உணவு கிடைக்காவிட்டாலும் சொற்ப தூரம் சென்றாவது எப்படியோ தனது வயிற்றை நிரப்பிக்கொள்ளும் தன்மை கொண்டது.

ஒரு நாள் வழமைபோல் அல்லாது கதிரவன் உதிக்கு முன்னரே அக்கடற்கரைக்குச் சென்றது. அன்றிரவு நல்ல நிலவாக அமைந்ததால் கடலலைகள் கூடுதலாக இருந்ததில் மீன்குஞ்சுக் கூட்டங்கள் கடலலைகளோடு அலைகளாக அள்ளுப்பட்டுக் கரைக்குத் தள்ளப்பட்டன. இவற்றில் பெரும்பாலான மீன்குஞ்சுகள், நீர் மீண்டும்கடலில் சேரும்போது அதனுடன் சேர்ந்து கடலுக்குள் சென்றுவிடவே சில மீன் குஞ்சுகள் பக்கத்திலுள்ள சதுப்பு நிலத்தில் மாட்டிக்கொண்டன. ஆனால் மீன் குஞ்சுகளுக்கு அவ்விடம் புதிதாக இருந்தமையாலும் அந்தச் சேற்று நீர் அவர்களுக்குப் புதிய நிலையை ஏற்படுத்தவே அவை அங்கு துள்ளித்துள்ளி விளையாடின.

மீண்டும் அலைகள் இங்கு வரத்தானே செய்யும். அதனுடன் இணைந்து நாம் எமது இனத்துடன் சேர்ந்து கொள்ளலாம், என அவை நம்பியமையால் சதுப்பு நிலத்தில் அவை மகிழ்ந்ததில் ஆச்சரியமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியற் காலையில் வந்த கொக்கிற்குச் சகுனம் நல்லதாக அமைந்தமையால் சதுப்பு நிலத்தில் துள்ளி மகிழும் மீன்குஞ்சுகளைக் கண்டு இன்புற்றவராய்த் தனது வழமையான செயலில் இறங்கவே இதைக் கண்ணுற்ற மீன் குஞ்சுகள் பாதுகாப்புத் தேடிச் சேற்றுக்குள் ஓடி ஒளித்தன.

ஆனால் கொக்குவிடவில்லை. அவைகளை இலேசாகப் பிடித்து முடியுமானவரை தனது வயிற்றுக்குள் செலுத்தி நல்ல மனநிறைவோடு மீண்டும் கரைக்குத்திரும்பியது. அந்த வெண்மை மணலில் தனது கம்பிக் கால்களை மடித்து இளைப்பாறியது மாத்திரமல்ல, நனைந்த தனது இறைக்கைகளைக் கதிரவனின் இளம் வெயிலில் காயவைப்பதற்காக அகல விரித்துத் தலையையும் சொண்டையும் அம் மணலின்மேல் வைத்துக் கொண்டிருந்தது. இக்காட்சி ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

இப்படியாக அது இளைப்பாறிக் கொண்டிருக்கும் போது அதற்கு முன்னே ஒரு சிறிய புற்று ஒன்று இருப்பதைக் கண்டு படுத்திருந்தபடியே தனது நீண்ட அலகை அப்புற்றுக்குள் செலுத்தியது. திடீர் என அதனுடைய அலகை ஏதோ ஒன்று நன்னுவது போன்ற உணர்வு ஏற்படவே உடன் அலகை வெளியே எடுத்தது. மீன் குஞ்சுகள் இங்கும் ஒழித்திருக்கின்றனவோ என எண்ணியது மாத்திரமல்ல எனது அலகைத் தீண்ட முற்படுகின்றனவே எனக் கோபம் கொண்டவராய், இவர்களுக்கு நல்ல பாடம் புகட்டவேண்டும் என்ற கர்வத்தினால் அவர்களை முதலில் பிடிக்க வேண்டும் என எண்ணித் தனது படுக்கையில் இருந்து எழுந்து புற்றடிக்குச் சென்று தனது அலகைப் புற்றுக்குள் செல்லும் அளவு உட்செலுத்தியது.

மீண்டும் தன்னைப் பிடிப்பதற்கு ஏதோ முற்படுகிறது என எண்ணிய புற்றுக்குள் இருந்த கடுக்காய் நண்டு இங்கேயே இவரைச் சமாதி கட்ட வேண்டும் என்ற நினைப்புடன் அதன் அலகைத் தனது கொடுக்கினால் லபக், என்று பற்றிக்கொண்டது. திடீர் என ஏற்பட்ட மின் பாய்ச்சல் ஆபத்தை உணர்ந்த கொக்கு முன்போலவே அலகை வெளியே எடுக்க முற்பட்டது. ஆனால் அது வர மறுக்கவே தனது பலம் முழுவதையும் தனது காலில் செலுத்தி அந்த வெள்ளை மணலைப் பல முறை உதைத்தும், விறாண்டியும் பார்த்தது. செட்டைகளையும் பலமுறை அடித்துப் பறப்பதற்கும் முயற்சி செய்தது. மணலில் அங்குமிங்குமாகப் புரண்டு அல்லல்பட்டது.

அலகில் கடும் நோ ஏற்படவே "என்ன விபரீதம்! தேவையில்லா வேலையில் மாட்டிக் கொண்டேனே! ஆப்பிழுத்த குரங்கு போல் ஆகிவிடுமோ எனப் பலவாறான தீய எண்ணங்கள் ஏற்படவே எப்படியும் இந்த வில்லங்கத்திலிருந்து மீளவேண்டும் என்ற எண்ணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் தனது எல்லா உறுப்புக்களையும் ஒரே முறையில் செயல்படுத்தவே மரவள்ளிக் கிழங்கு நிலத்தில் இருந்து விடுவது போன்ற நிலையில் புற்றை உடைத்துக்கொண்டு அலகைக் கவ்வியபடி கடுக்காய் நண்டு ஒன்று வருவதைக் கண்டது. உடனே தனது அலகை நண்டில் இருந்து மீட்பதற்காக நண்டுடன் சேத்துத் தனது அலகை அந்த வெள்ளை மணலின் மேல் பல முறை அடித்தது. மணலுடன் போட்டு உராய்ந்தது. நண்டோ தனது கவ்வலை விட்டால் இனி மீட்சியே இல்லை என உணர்ந்து தனது கொடுக்குத் உடலைவிட்டு அகன்றாலும் பரவாயில்லை இனி அதன் அலகை விடக் கூடாது எனத் தனது பலம் முழுவதையும் பாவித்து அலகை எதுவித கிலேசமும் இல்லாமல் பிடித்தபடியே இருந்தது.

மணலில் அடித்தும் இது விடாது என உணர்ந்த கொக்கு ஏதும் பாறைகளோடு மோதுவதால் தான் இதற்கு ஒரு முடிவே கட்டலாம் என எண்ணி நண்டையும் தூக்கிக்கொண்டு மலைச்சாரலை நோக்கி வேகமாகவும், உயரமாகவும் பறந்தது. கொக்கு உயர உயரப் போவதையும், மலைகள் நெருங்கி வருவதையும் கண்ட நண்டு பயத்தினால் தான் எப்படியும் தப்பிவிட வேண்டும் என நினைத்தது. இந்த நிலையில் எனது பிடியை இளக்கினால் கீழே விழுந்து இறந்துவிடுவேன். இதுவரை போராடியதில் எதுவித பலனும் இல்லாது போய்விடும் என்ற அச்சமும் ஏற்படவே கொக்குடன் சமாதானப் பேச்சை உடன் தொடங்கவேண்டும் என்ற எண்ணத்தில்,

''நண்பனே! நீ என்னைக் கொல்வதற்காகத் தான் மலையை நோக்கி வேகமாகச் செல்கிறாய் என்பது எனக்கு நன்றாகப் புரிகிறது. நான் இறப்பதற்குத் தயாராகத்தான் இருக்கிறேன் ஆனால் நீ மலைச் சாரலை அடையும் முன்னர் உனது அலகைத் துண்டாக்கி உன்னையும் வாழ விடமாட்டேன் நான் புற்றில் இருந்த போது நீயாகத்தான் என்னுடன் மோத வந்தாய். ஆகவே இருவரும் சமாதானமாகப் போவதே சிறந்தது. நீ மீண்டும் என்னை அந்தப் புற்றடியில் பவுத்திரமாகக் கொண்டுபோய் விட்டுவிடு. எதுவித பாதிப்புமில்லாமல் நீயும் மேலும் வாழலாம். சம்மதிக்கிறாயா,'' என்று கேட்டது.

இதைக்கேட்ட கொக்கு சற்றுச் சிந்திக்கத் தொடங்கியது. அல்கிலும் வலி அதிகரிக்கவே பறக்கும் தன்மையிலும்தளர்வு ஏற்படத்தொடங்கியது எதிரியின் பலத்தை அறியாமல் நடந்துகொண்டமை பற்றிக் கவலை கொண்டது. தன்னை விட நண்டு எவ்வளவோ சிறியதாய் இருந்தாலும் அதன் பலம் பெரியதன்றோ! அடிமைப்படுத்த முயற்சித்தால் ஏற்பட்ட வினையாகிவிட்டது. என்னவாக இருந்தாலும் நண்டின் உயிரைப் பறிப்பதால் எனது கோபம் மட்டுமே தீரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் வாழும் நண்டுகளின் பலத்தை எனது முயற்சி எதுவிதத்திலும் குறைத்துவிடாது. என்று புத்திசாலித்தனமாகவும் எண்ணியது. பறக்கும்போது அலகு என்னைச் சமநிலைப்படுத்தும் முக்கிய பகுதியன்றோ. அலகு இல்லாமல் எப்படி உணவைப் பெறமுடியும் எனக்கு யார் உதவப்போகிறார்கள். நண்டைக் கொல்வதிலும் பார்க்க அதை உயிருடன் விடுவதால் இருவருக்கும் நன்மையே என்று சிந்தித்துக்கொண்டு மலைச்சாரலுக்குப் போவதற்கு எடுத்த வேகத்திலும் பார்க்கப் பல மடங்கு வேகத்துடன் புற்றை நோக்கிக் கொக்கு விரைந்தது. சமாதானத்துக்குக் கொக்கு வந்ததையிட்டு நண்டு மிகவும் சந்தோஷப்பட்டது. இருந்தாலும் புற்றுக்குச் செல்லும்வரை யோசனையுடனேயே இருந்தது.

புற்றடியில் கொக்கு வந்து இறங்கியதும் நண்டு தனது பிடியை இளக்கி உடைந்த புற்றுக்குள் ஒருவாறு சென்று, ''நண்பா,'' இன்று சகுனம் நல்லது போல் இருக்கிறது. உனது இரண்டு சொண்டையும் பிடித்தமையால் நான் தப்பினேன். உன்னிடம் அகப்பட்ட எந்த நண்டும் உயிர் தப்பியது கிடையாது. அதேபோலவே எனது கொடுக்கினால் தாக்கப்பட்ட எந்த உயிரினமும் காயப்படாமல் இருந்ததும் கிடையாது. நாங்கள் இருவரும் சமாதானத்தை விரும்பியமையால் மேலும் உயிர்வாழ முடிந்துள்ளது. இச்சமாதானத்தை இப்புற்றிலேயே முன்னமே செய்திருக்கலாம். இருந்தாலும் இப்படியாவது ஒரு சமாதானம் வந்ததையிட்டு இறைவனுக்கு நன்றியை இருவம் தெரிவிப்போம் ''என்று கூற,'' இப்பொழுது தான் எனது அலகை ஆட்ட முடிகிறது. தேவையற்ற வேலைகளுக்குச் செல்வதாலும் விபரீதங்கள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்பட்டாலும் புரிந்துணர்வு என்ற கோட்பாட்டைப் பின்பற்றுவதன் மூலம் இடர்களை நிவிர்த்தி செய்யலாம்'' எனக் கொக்கு கூறிப் பறந்து சென்றது. மீண்டும் கொக்கு அவ்விடத்தை நினைத்துப் பார்த்திராது என நாம் நம்பலாம்.

-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவளையும் கழுதையும்

தென் மேல் வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றுக்கள் வீசுவதால் மழை குறைவின்றிக் கிடைக்கும் நாடு அது. விவசாயத்திற்காகக் காடுகள் பல அழிக்கப்பட்டிருந்ததால் மழை வீழ்ச்சியின் நிலைமை சற்றுக் குறையத் தொடங்கியது.

நீரைச் சேமித்து நீர்ப்பாசனம் செய்வதற்கு ஒழுங்குகள் பல மேற்கொண்டாலும் அவை திருப்திகரமாக இருக்கவில்லை. இதனால் மழைநீர் ஒரு பக்கமாகச் சென்று வீணே கடலை அடையும். மேலும் காடுகளை வெட்டிச்செல்வதன்மூலம் மழை அங்கு குறைந்து விடுவதற்குச் சாத்தியக் கூறுகள் உண்டென்று உலக விஞ்ஞானிகள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவே பயனற்ற விவசாய நிலங்களில் மரங்களை நட அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டது. அத்துடன் காட்டு மரங்களை தறிக்கக் கூடாதென்று கடுமையான உத்தரவு பிறப்பித்தது மட்டுமல்லாது காட்டு மிருகங்களைக் கொல்வதும் தடைசெய்யப்பட்டது.

மிருகங்களைக் கொல்பவர்களுக்கு மரண தண்டனையும், மரம் தறிப்பவர்களுக்கு கடூழியச் சிறைத்தண்டனையுடன் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும் என்றும் அரசு கடுமையான உத்தரவு பிறப்பித்தமையால் காட்டுப் பக்கம் செல்வதற்கு அவ்வூர் மக்கள் அஞ்சினர். இதனால் பல வருடகாலம் பறிக்கப்பட்டிருந்த சுதந்திரத்தை அக்காட்டு மிருகங்களும், பிராணிகளும், மரங்களும் கத்தியின்றி இரத்தமின்றிப் பெற்றுக்கொண்டன. ஆகவே காட்டில் வாழ்ந்த பிராணிகளும் மிருகங்களும் மனிதபயமின்றி வாழ்ந்தன.

சுதந்திரம் கிடைத்த மரங்களும் கொடிகளும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு விண்ணை நோக்கிச் செல்ல மண்ணை நோக்கி வந்த சூரிய ஒளி தடைப்பட்டமையால் நிலம் எந்நேரமும் ஈரலிப்பாக இருக்கவே அவைகள் செழித்து வளர்ந்ததில் "ஆச்சரியமே இல்லை எனலாம். இதனால் அங்கு வாழ்ந்த உயிரினங்கள் தங்கள் பாதுகாப்பைச் சுலபமாகத் தேடிக்கொண்டன.

இப்படியான சூழலில் அமைந்த அக்காட்டின் மத்தியில் என்றுமே வற்றாத ஒரு தடாகம் இருந்தது. இரவிலே விண்ணை அலங்கரித்த விண்மீன்கள் பகலிலே இத்தடாகத்திற்கு வந்துள்ளனரோ. என்று ஏங்கும் அள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கு தாமரையும் அல்லியும் பூத்துக்குலுங்கி அத்தடாகத்தின் அழகை வெளிப்படுத்தின. அந்தக் குளிர்ந்த நீரில் துள்ளிமகிழும் மீன் கூட்டத்தின ரால் சிதறுண்ட நீர் தாமரை இலையில் இருந்து ஆடும் காட்சி பட்டம் வெட்டப்பட்டுப் பார்வைக்கு வைக்கப்பட்ட வைரக்கற்கள் போல் இருந்தது. இன்னும் எத்தனையோ இயற்கை அழகுகள் சாதாரணமாகவே அமைந்திருந்த அத்தடாகத்தின் சுற்றாடலில் உள்ள காட்டு மிருகங்கள் பயமின்றி இங்கு வந்து நீர் அருந்திச் செல்வது வழக்கமாய் இருந்தது.

யானைக் கூட்டங்கள், காட்டு எருமைகள் போன்றவை இங்கு நீர் அருந்திவிட்டுச் செல்லும். மான், மரைக்கூட்டங்கள் இங்கு நீர் அருந்தி விட்டுச் சற்று நேரம் இளைப்பாறிக் கொள்ளும். நரி, கரடி, பன்றி போன்றவைகள் பெரிய இறுமாப்புடன் வந்துபோகும். கழுதைகளும் சில வேளைகளில் வருவதுண்டு. இப்படியாக வேறு பல மிருகங்களும் இத்தடாகத்திற்கு விரும்பியே வருகின்றன.

பல வருடங்களுக்கு முன்னர் இத்தடாகத்தின் கரையில் கருங்காலி மரம் ஒன்று வேருடன் சாய்ந்து தண்ணீரில் விழுந்திருந்தது. அது தனது வைரத்தைக் காட்டுவதற்காக நீரில் கிடந்தும் சற்றும் உக்கி உருக்குலையவில்லை. அதன் கொப்புகளில் கொடிகள் படர்ந்திருந்தமையால் பட்டமரம்போல் தெரியவேயில்லை. இருந்தாலும் அதன் ஒருபக்கக் கொப்பின் ஓரத்தில் பொந்து ஒன்று இருந்தது. அதனைத் தவளை ஒன்று தனது இருப்பிடமாக்கி வாழ்ந்து வந்தது. பகல் நேரங்களில் பொந்தில் இருந்து வெளியே வந்து கொப்பில் இருந்து கொள்ளும். தேவை ஏற்படின் நீரில் பாய்ந்து நீந்திக்கொண்டிருக்கும். அவ்விடத்தில் மிருகங்களின் ஆரவாரம் ஏற்படுகின்றபோது யாருக்கும் தெரியாதவாறு நீரில் சுழியோடி மீண்டும் கொப்பில் ஏறிவிடும். அக்கொப்பில் இருக்கும் வேளைகளில் அங்கு நீர் அருந்தவரும் மிருகங்களின் நடவடிக்கைகளைக் கண்ணுற்ற படியே இருக்கும்.

எவ்வளவு சந்தோஷமாக இம் மிருகங்கள் இக்காட்டில் வாழ்கின்றன. இயற்கையின் எழிலை ஒவ்வொரு நாளும் அனுபவிக்கிறார்கள். அவர்கள் இங்கு வரும்போது தங்கள் வயிற்றை முழுமையாக நிரப்பியபின் தானே வருகிறார்கள். இத்தடாகத்திற்கப்பால் எவ்வளவோ வசதிகள் இருக்கின்றன போலும். மெலிந்து ஒட்டலாகி இங்கு வருபவர்கள் யாரும் இல்லையே என்று பலவாறாகச் சிந்தித்துக்கொண்டது. நானோ எனது வாழ்க்கை முழுவதும் இப்பொந்தும் கொப்புமாக வாழ்கின்றேனே! இவ்வாழ்க்கை கிணற்றுத்தவளை போல் அல்லவா இருக்கிறது. குளத்தில் வாழ்ந்து கொண்டு கிணற்றுத் தவளைபோல் இருக்கலாமா? எப்படியும் இக்காட்டை யாயினும் சுற்றிப்பார்த்திட வேண்டுமென எண்ணியது.

தத்தித் தத்திச் சென்று, ''என்னால் இவ்விடத்தைப் பார்க்க முடியுமா? நான் செல்லும் வழியில் பாம்புகளைச் சந்தித்தால் நிலைமை எப்படி இருக்கும்? வாய்க்கு அவல் கிடைத்ததுபோல் அல்லவா முடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையை விலைக்கு வாங்கலாமா? இம் முயற்சி ஆண்டி மடம் கட்டியது போல் இருக்காதா?'' என்று புத்திசாலித்தனமாகவும் எண்ணியது. இறப்பு என்பது ஒரு நாளைக்கு வரத்தான் போகிறது. இதற்குப் பயந்தால் நாம் ஒன்றும் செய்யமுடியாது. சுதந்திரம் வேண்டும் என்று போராடுபவன் தனது உயிரைப்பற்றி அஞ்சுவதில்லையே! வாழ்கின்றபோது எமக்கு விரும்பியவற்றைப் புத்திசாலித்தனமாக பெற்றுக்கொள்வதே சிறந்தவழியாகும் என்று சிந்தித்துக்கொண்டு ஈற்றில் ஒரு முடிவுக்கு வந்தது.

இக்காட்டு மிருகங்களின் உதவியுடன் இக்காட்டைச் சுற்றிப்பார்த்து விடலாமே! பழம் இருக்கக் காயைத்தேடி ஏன் அலையவேண்டும்? ஒவ்வொரு நாளும் எத்தனையோ மிருகங்களைப் பார்க்கிறேன். அவர்களின் முதுகிலே ஏறி இருந்தாலே போதுமே! மீண்டும் அவர்கள் நீர் அருந்த வரும்போது எனது இருப்பிடம் திரும்பிவிடலாம். நான் என்ன நனைந்த மண்மூட்டைப் பாரமா? என்று எண்ணித் தனக்கு வசதியான மிருகம் எது எனக் கண்காணிக்கத் தொடங்கியது.

முதலில் மானைப்பற்றி யோசித்தது. அது ஒரு சாதுவான மிருகம் ஆனால் வேகம் கூடியது. அதனுடைய பாய்ச்சலைப் பார்த்தால் அதன் முதுகில் இருக்கும் எனது பாடு எப்படியிருக்கும்? அது ஓடும் விசையில் எதிர்ப்படும் காற்றினால் எனது இதயம் என்ன பாடு படும்? மின்னல் வேகத்தில் செல்லும்போது தூக்கி வீசப்பட்டால் எந்த முள் பற்றையில் விழுவேனோ! பிறகென்ன! சொல்லவும் வேண்டுமா? ஆகவே மானின் கதையே வேண்டாம் என்று எண்ணி யானையைப்பற்றிச் சிந்தித்தது. இதன் முதுகில் போய்க் குந்திவிட்டால் நான் கீழே விழத்தேவையிராது. ஆனால் அது தனது தும்பிக்கையால் என்னைத் தூக்கி எறிந்துவிட்டால் பாக்கு நீரிணையைப் பார்த்து இந்தியாவில் போய் விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இருந்தாலும் இந்திய தேசத்தைப் பார்க்கும் அதிர்ஷ்டசாலி ஆவேன்,

ஆனால் நான் போகும் விதம்தான் எப்படியிருக்குமோ! தலை கீழாகவோ, அல்லது உருளும் பம்பரம் போன்றோ அல்லது துப்பாக்கியில் இருந்து வெளியேறும் ரவைபோன்றோ, எது என்று தெரியாமல் இருக்கிறது. யானை ஒங்குவந்து போகட்டும் பரவாயில்லை. இவ்வித நினைப்பே வேண்டாம். எனவே யானையில் ஏறுவதைக் கற்பனையில் கூடப் பார்க்க முடியாது என்ற முடிவுக்கு வந்தது.

பின்னர் காட்டு எருமையைப் பற்றிச் சிந்தித்தது. இது சுலபமான பயணமாக இருக்கும். முதுகில் இருந்தாலும் எருமைக்குத் தெரியாது. குளச்சேறு ஒட்டியிருக்கிறது என்றுதான் நினைக்கும். இதனால்தான் இதற்கு எருமை என்று பெயர் வைத்தார்களோ? சில வேளைகளில் அது தனது முதுகை மரத்தோடு உராயும் குணமுடையது. அந்த நேரத்தில் நான் அகப்பட்டால் எப்படியிருக்கும்? அவித்த கீரையைக் கடைந்தமாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காதா? எலும்பு எது தோல் எதுஎன்ற வித்தியாசம் தெரியாத அளவில் உருவமே மாறிவிடுமே! இதுவும் எனது உயிருக்கு உலைவைப்பே ஆகவே இதில் பயணம் செய்வதையும் விலக்கி விடுவோம் என்று எண்ணியது.

புலால் உண்ணும் மிருகங்களின் உதவியுடன் செல்லவும் முடியாது. என்ற எண்ணம் வருகிறது. சில வேளைகளில் அவர்கள் என்னைச் சிற்றுண்டிக்கான உணவாக்கிவிட்டால் என்ன செய்வது? அதில் இருந்து தப்புவதற்குத் தாவர பட்சணியின் உதவியைத்தான் நான் பெறவேண்டும். எதற்கும் புத்திசாலித்தனம் வேண்டும். என்று எண்ணி மேலும் தனது சிந்தனையை முடுக்கிவிட்டது. யார் பொருத்தமாக வருவார், ஒத்துழைப்பவர் யாராக இருக்கப் போகிறார் என்ற சிந்தனையும் வளர்ந்தது இதனால் நண்பகல் வரை உணவு பெறுவதற்கு முயற்சிக்கவில்லை, தனக்கு ஒத்துவராத மிருகங்கள்தான் குளத்துக்கு வருகின்றனவே. இதுவும் எனது காலமோ என்று ஏங்கிக்கொண்டிருக்கும் வேளையில் ஒரு கழுதை குளத்தை நோக்கி மிக ஆறுதலாக வருவதைக் கண்டது.

அதனுடைய உருவத்தையும் நடையையும் உன்னிப்பாகக் கவனித்தது அதன் காது பெரிதாக இருப்பதைப் பார்த்தது. விசித்திரமாக இருக்கிறதே என எண்ணிப் பயணம் செய்யும் போது ஏதேனும் வில்லங்கம் ஏற்படின் அதன் காதுக்குள் போய் ஒழிந்து கொள்ளலாம். இதுதான் எனக்குச் சரியான மிருகம் இதைப் பயன்படுத்துவதன் மூலம் எனது இலட்சியத்தை நிறைவேற்றலாம் என முடிவெடுத்தது. உடனே செயலில் இறங்கினால் கழுதை நீரைக்குடிக்காமல் வெருண்டு விட்டால் என்ன செய்வது? நன்றாக நீரை அருந்தியபின் அதன் முதுகில் அதற்குத் தெரியாமலே ஏறிவிடவேண்டும். அது நீரை அரைகுறையாகக் குடித்துவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் மீண்டும் கழுதைக்குத் தாகம் ஏற்படின் எனது பயணமும் அரைகுறையாகி விடுமே என எண்ணிக் கழுதை நன்றாகத் தண்ணீர் குடிக்கும் வரை தனது மனத்தை அடக்கமாக வைத்திருந்தது.

கழுதையும் தவளை எதிர்பார்த்ததுபோல் ஆறுதலாகத் தண்ணீரைக் குடித்துவிட்டு மெதுவாகப் பின்நோக்கிவர முற்படுகையில் கொப்பில் இருந்த தவளை அதன் முதுகில் திடீர் எனப்பாய அது தவறுதலாகக் கழுதையின் காதுப்பக்கத்தில் போய்த் ‘தொப்’ என்று விழுந்தது. காதுக்குள் ஏதோ செல்லப் போகிறதே என நினைத்த கழுதை திடுக்கிட்டவராய் இரண்டு பெரிய காதுகளையும் மடித்துக்கொண்டு வெருண்டு ஓடியது மாத்திரமல்லாமல் பயத்தினால் வழமையான சத்தத்தைவிடப் பலமடங்கு ஒலி எழுப்பிக் கத்திக்கொண்டு காட்டை நோக்கி ஓடியது. இச்சத்தம் கழுதையின் வாயால் வருகிறதா அல்லது காதால் வருகிறதா என்று எண்ணமுடியாத அளவிற்குத் தவளைக்குக் கஷ்டமாக இருந்தது. உலகில் உள்ள தவளைகள் எல்லாம் ஒன்றுகூடி ஒரே முறையில் கத்தினாலும் இச்சத்தத்திற்கு ஈடுகொடுக்க முடியாதவாறு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப்படைந்த கழுதை சில வேளைகளில் மெதுவாக ஓடும் பொழுது நல்ல இயற்கைக் காட்சிகளை முறையாகக் காட்டுவதற்காகத் தான் இப்படிச் செய்கிறது. என எண்ணித் தவளை மகிழ்ந்தது. கழுதை சில வேளைகளில் வேகமாக ஓடும்பொழுது தவளை தனது சமநிலை குறையவே கழுதையின் காதைத் தனது வாயினால் கவ்வவே காதுக்குள் போகப் போகுதோ என நினைத்துக் கழுதை தனது தலையைப் பல முறை ஆட்டிக் கொள்வதால் வேகத்தைக் குறைத்துக் கொள்ளும்.

இப்படியாகக் கழுதை மேய்ச்சல் இன்றி அன்று முழுவதும் முன்னர் என்றுமே பார்த்திராத இடங்கள் எல்லாம் அலைந்து ஓடியது. தவளையோ காட்டின் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து மெய்சிலிர்த்தது. ஓங்கி வளர்ந்த மரங்கள்; பூத்துக் குலுங்கிய கொடி செடிகள். பச்சைப் பசேல் என்றிருந்த சமவெளிகள். ஆறுபோல் ஓடிக்கொண்டிருக்கும் வாய்க்கால்கள். பறவைகளின் இனிய கீதங்கள் இன்னும் எத்தனையோ காட்சிகளைப் பார்த்து மகிழும் இதே நேரத்தில் கழுதைக்குக் களைப்பு மிகுதியால் வாயால் நுரையே தள்ளியது. கடும் களைப்புடன் கழுதைக்குத் தண்ணீர்த் தாகம் சேரவே மீண்டும் நீர் அருந்த வேண்டும்போல் இருந்தது.

வேறு ஓடுவழியால் குளத்தை நோக்கி விரைந்தது. தன்னைக் கொல்லும் மிருகங்கள் ஏதேனும் குளத்தடியில் இருக்கிறார்களா என்று கூடப் பார்க்காமல் குளத்தை அடைந்ததும் நீரை அவசர அவசரமாகப் பருகிற்று. கழுதை நீரைக் குடிக்கும் விதத்தைப் பார்த்தால் குளம் சற்று நேரத்தில் வற்றிவிடும் போல் இருந்தது.

எனக்காக அவலப்பட்டவர் நன்றாக நீர் குடிக்கும் வரை தவளை கழுதைமேல் அமைதியாக இருந்துவிட்டு நீர் குடித்து முடிந்ததும் மெது வாகத் தண்ணீரில் பாய்ந்து தனது இருப்பிடம் சேர்ந்தது. முயற்சி உடையவர்கள் இகழ்ச்சியடைய மாட்டார்கள் என்ற மனநிறைவோடு தனது செயலை நினைத்துப் பெருமை கொண்டது. கழுதையும் இனி இந்தப் பக்கம் வருவதை நிறுத்திவிடவேண்டும் என்ற சிந்தனையுடன் குளப் பக்கத்தையே பார்க்காமல் போனால் காணும் என்ற நிலையில் காட்டுக்குள் அவசரத்துடன் சென்றுவிட்டது.

---



4 —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓநாயும் குதிரையும்

உலகில் வாழும் உயிரினங்களுள் அனேகமானவை கூட்டம் கூட்டமாகவே வாழ்கின்றன. மனிதன் இதில் விதிவிலக்கல்ல. காட்டிலும் சரி நாட்டிலும் சரி இவை வித்தியாசப்படுவதில்லை. விரல் விட்டு எண்ணக் கூடிய உயிரினங்கள் தனியாகவும் வாழ்வதை நாம் பார்க்கிறோம்.

காட்டில் யானை, குரங்கு, மான், ஓநாய் போன்ற மிருகங்கள் கூட்டத்தைப் பிரிந்து வாழ்வதை நாம் அறியவில்லை. எத்தனையோ யுகங்களைக் கண்டிருக்கும் இவ்வுலகம் இவை பிரிந்து வாழ்வதைக் கண்டதாக இதுவரை எது வித்தகவலும் இல்லை என்று சொல்லலாம். இவைகள் ஏன் கூட்டமாக வாழ்கின்றன என்பதை அவதானிக்கும்போது எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். இவற்றில் இலேசாகக் காணக் கூடியவை உணவை அவை சுலபமாகப் பெற்றுக்கொள்வதும் பாதுகாப்புக் காகத் தம்மைத் தயார்படுத்துவதுமாகும்.

காட்டில் வாழும் ஓநாய்கள் தங்கள் உணவைப் பெற்றுக்கொள்வதற்காகவே முக்கியமாகக் கூட்டமாக வாழ்கின்றன. ஒரு ஓநாயால் ஒரு மிருகத்தைக் கொன்று உண்ண முடியாமல் இருப்பதால் பல ஓநாய்கள் சேர்ந்து மிருகத்தை மறித்துக் கொன்று உண்பதை நாம் அறிகிறோம். ஆகவே ஓநாய்கள் தனித்து வாழ நினைத்தால் அது இயற்கையானதாக அமைவதில்லை. எல்லோரும் சேர்ந்து ஒத்துழைப்பதன் மூலம் அவை காட்டில் உயிர் வாழ்கின்றன.

ஓர் அடர்ந்த காட்டில் ஓநாய்க் கூட்டங்கள் வசித்து வந்தன. இவற்றுள் ஒரு ஓநாய் இக்கூட்டத்துடன் சேராமல் தனியாகவே வாழ்ந்து வந்தது. இதனால் அது உணவைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமமடைந்தது. பெரிய மிருகங்களைப் பிடித்து உண்பது அதற்குப் பெரிய பாடாய் இருந்தது. ஆகவே சிறியவையான முயல், கீரி போன்றவற்றைப் பிடித்துத் தனது உணவாக்கியது.

அடர்ந்த காடாயிருந்தமையால் அவைகளைப் பிடித்து உண்பதும், அதற்கு இலேசான காரியமாக இருக்கவில்லை. ஆகவே உணவு விடயத்தில் தாங்கொணாத் துன்பமடைந்தது. அத்துடன் தனிமையாகவே தனது உறைவிடத்தையும் வைத்திருந்தமையால் அதுவும் பாதுகாப்பற்றதாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரி எப்போது வந்து தாக்குவான். என்ற பயசிந்தனையுடனே தனது வாழ்க்கையை நடாத்திச் சென்றது. இப்படியாக வாழ்ந்து வரும் போது உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இக்காடு சரிவராது என எண்ணிக் காட்டின் அயலில் இருக்கும் கிராமத்துக்குச் சென்று உணவைத் தேடலாமென, ஒரு நாள் இரவு அங்கு சென்றது. ஓநாய் ஆச்சரியப் படும் அளவிற்கு அங்கு கோழிகளும், ஆடுகளும் நிறைவாக இருப்பதைக் கண்டு மகிழ்ந்தது. இம் மிருகங்களைப் பிடித்து உண்பதற்குக் கூட்டம் தேவையில்லையே என்றும் எண்ணியது.

வெறும் கையுடன் மீண்டும் காட்டுக்குச் செல்வதற்கு விருப்பமின் மையால் ஒரு கொழுத்த ஆட்டைக் கொன்று அதைக் காட்டுக்குள் கொண்டு வந்தும் விட்டது. உணவு தேவைப்படும் பொழுது இரவில் அக்கிராமத்துக்குள் சென்று தனக்கு விரும்பியவற்றைத் தரம் பிரித்துக் கொண்டு வருவது ஓநாய்க்கு ஒரு சாதாரண நிகழ்ச்சியாயிற்று. உணவுப் பிரச்சினை தீர்ந்து விட்ட மகிழ்ச்சியால் அதன் உடல் களைப் பற்றதாக வும் முதுமை மறைந்து இளமை மிளிரும் தன்மை உடையதாகவும் மாறியது.

கோழிகளும், ஆடுகளும் மாயமாக மறைவதை உணர்ந்த கிராமத் தவர்கள் அதிசயப்பட்டனர். கள்வர்கள் இக் கிராமத்தில் இருப்பதாக அவர்கள் சந்தேகிக்கவில்லை. எல்லோரிடமும் இம் மிருகங்கள் நிறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

ஆகவே இக்களவை எப்படிக் கண்டு பிடிப்பது என்பதையிட்டுக் கதைப்பதற்காகக் கிராமவாசிகள் எல்லோரும் ஒன்று கூடினர். இந்த விபரீதத்துக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று ஏகமன தாய் தீர்மானித்து விழிப்புக்குழு ஒன்றை அமைத்தனர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் இரவில் காவல் செய்யவேண்டும் எனவும், தக ரத்தைத் தட்டி, வாயினால் 'கூவ்' என்ற ஒலி எழுப்ப வேண்டும் என் றும் முடிவு செய்து செயலில் உடன் இறங்கியும் விட்டனர்.

ஆகவே அக்கிராமத்தில் இரவில் இருந்து விடியும் வரை தகர அடிக்கும் 'கூவ்' என்ற பெரும் சத்தத்திற்கும் குறைவே இருக்கவில்லை. இச் சத்தம் தொடங்கியதில் இருந்து மிருகங்கள் களவு போவது உடன் நின்றதை உணர்ந்த கிராமவாசிகள் சந்தோஷம் அடைந்தவராய் அதைத் தொடர்வதை வழக்கமாக்கியும் கொண்டனர்.

'கூவ்' என்ற சத்தத்தை விடத் தகர அடிதான் ஓநாய்க்குப் பெரிய இடைஞ்சலாக இருந்தமையால் கிராம எல்லைக்குச் செல்லவே அச்சப் பட்டது. தகரத்துக்கு இந்த அடி அடிப்பவர்களிடம் நான் அகப்பட்டால் எனது உடலில் ஓடும் இரத்தம் எந்தப் பக்கத்தால் பீறிடுமோ? நிலைமை எப்படி இருக்கும்? அதுவும் ஓநாய் தான் இங்கு வந்து போவதையறிந் தால் என்னை என்னென்ன செய்வார்களோ, என்றும் ஏங்கியது. இலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகக் கிடைத்த இந்த அருமையான உணவுக்கு அழிவு வந்து விட்டதே! இனி நான் எங்கு போவேன்? இனி என்னை எனது இனம் சேர்க்குமா? என்றும் பலவாறாக எண்ணியது.

ஓநாய் இப்படியாக எண்ணும் போது கிராமத்திலும் இம்முயற்சியால் பாதிப்பே ஏற்பட்டது. தகரச் சத்தத்தாலும் கூவ் என்ற ஒலியாலும் கிராமவாசிகளுக்கு நித்திரை என்ற அந்தச் செல்வம் குழம்பியது

மிருகங்களுக்கும் அதே நிலையே! மிருகங்களின் இரவுத் தூக்கம் தடைப்பட்டதால் அவர்கள் பகலில் தூங்கத் தொடங்கினர். இதனால் மேய்ச்சல் குறைவாக நடைபெற்றது. அக்குறைவினால் பால் உற்பத்தி மந்தப்போக்கில் சென்றது. மாடுகள் இரவில் இரை மீட்பதை நிறுத்திக் கொண்டன. கோழிகள் முட்டையிடுவதையும் குறைத்தன. அத்துடன் அவை ஒரு வெருட்சிப் போக்காகவும் இருந்தன இது பெரும் பிரச்சினையாகக் கிராமக்களுக்கு இருந்தது. என்ன பாதிப்பு கிராமத்துக்கு வந்தாலும் கள்வனைப் பிடிக்கும் வரை இப்போராட்டம் தொடரும் என்று விழிப்புக்குழு ஒரேமுடிவாய்க் கூறிவிட்டது.

நான் ஒருவன் இக்கிராமத்துக் குச்சென்றதால் அங்குள்ளவர்கள் இப்படியாகினால் காட்டிலுள்ள ஓநாய்களெல்லாம் அங்கு சென்றால் நிலைமை எப்படி இருக்கும் என்று எண்ணியது ஓநாய்.

இரவு வேட்டை இருளாகிவிடவே ஓநாய் பகல் வேட்டைக்குச் செல்லத் தீர்மானித்தது. இரவில் தூக்கமின்றி இருந்தவர்கள் பகலில் நல்ல தூக்கத்துடன்தான் இருப்பார்கள். எனது கைவரிசையைக்காட்ட இது ஒரு சந்தர்ப்பமாக இருக்கும். என்னவாக இருந்தாலும் பகல் களவு எவருக்கும் ஒரு பிரச்சனைதான். எதற்கும் அவதானம் தேவை என்று புத்திசாலித்தனமாகவும் நினைத்தது.

பகல் வேட்டையில் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படின் பாதிப்பின்றி உடன் இருப்பிடத்திற்கு வந்துவிடவேண்டும் என்பதற்காகக் கிராமத்துக்குக் கிட்டடியாகச் செல்லும் வழியையும் தீர்மானித்து ஒரு நாள் காலை காட்டை விட்டுக் கிழம்பியது.

சொற்ப தூரம் சென்றதும், ஒரு வெளியைக் கடக்க நேரிட்டது. வேறு யாரேனும் காணாத வகையிலே பதுங்கி மெதுவாகச் சென்றுகொண்டிருக்கும் வேளை தொலைவில் அழகான குதிரை ஒன்று அமைதியாகப் புல் மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டது. எனது இனத்தவருடன் வந்திருந்தால் எவ்வளவு சுலபமாக இவரை மடக்கியிருக்கலாம், இருந்தாலும் கிராமத்தவர் காவலுக்காக இங்கு அனுப்பினார்களோ என்றும் எண்ணியது. கிராமத்துக்குச் செல்லுமுன் இதன் நிலைமையைஅறிவதற்காக மிக அவதானத்துடன் குதிரைக்குச் சமீபமாகச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் குதிரையோ எதுவித ஆரவாரமுமில்லாமல் மெதுவாக அடியெடுத்து வைத்துப் புற்களை மேய்ந்து கொண்டிருந்தது. குதிரையின் அழகைப்பார்த்துப் பொறாமை கொண்டவராய், எவ்வளவு கம்பீரமான தோற்றம், உடல் மினு, மினு என்று இருக்கிறதே! புல்லைத் தின்னும் இதற்கு இவ்வளவு அழகிய உடலை இறைவன் கொடுத்திருக்கிறாரே. மிருகங்களின் இராஜாவாகத் தெரிவு செய்யாதது ஆச்சரியமாக இருக்கிறதே நான் முன்னின்றாலும் அது கிலேசமடையவில்லையே. இதற்கு வீரம் குறைவு போல் தெரிகிறது. இதனால்தான் இராஜாவாக தெரிவு செய்யப்படவில்லைப் போலும் என்றும் எண்ணியது.

பின்னர் அதன் வாலின் அழகைப்பார்த்தது. குஞ்சம் போன்ற அந்த வாலை அசைத்துக்கொண்டிருக்கும் காட்சி தாளம் தப்பாது காட்டும் கை அசைவு போல் இருந்தது. அதை ரசிப்பதற்குக் குதிரையின் பின்பக்கமாகச் சென்று சற்றுநேரம் பார்த்தது அதற்குக் குதிரை கிலேசமடையவில்லை ஏன் நான் இன்று கிராமத்துக்குச் செல்ல வேண்டும். இந்த அப்பிராணியை உணவாக்கி விடலாமே. இதற்கு உடல் வளர்ந்ததேயொழிய சாயலைப் பார்த்தால் மூளை இல்லாத கழுதைபோல் தெரிகிறதே! என்று எண்ணியது.

பல நாட்கள் உணவுக்காக கஸ்ரப்பட்ட எனக்கு இன்று அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது. எதுவித கிலேசமும் இல்லாதிருக்கும் இம் மிருகத்தைக் கொல்வது பெரிய வேலையில்லை என்று முடிவாகிச் செயலிலும் இறங்குவதற்கு முடிவு செய்தது.

குதிரைக்கு முன் செல்வதும் பின் செல்வதுமாகக் கடிப்பதற்குரிய இடத்தைத் குறிபார்த்தபடி செயல்பட்டுக்கொண்டிருந்தது. குதிரை எல்லாவற்றையும் கடைக் கண்ணால் பார்ப்பதை ஓநாய் கவனிக்கவில்லை ஈற்றில் குதிரையின் பின் பக்கமாக அதைக் கடிப்பதற்கு முடிவாகிச் செயலில் இறங்குவதற்கு முதலில் அதன் பின் காலைக் கவ்விப் பார்ப்போம் என்று எண்ணி அங்கு விரைந்தது.

---

குதிரையோ வளம் வரும் வரை அமைதியாக இருந்து பின் எல்லாம் சரிவரவே பின்னங் கால்களில் ஒன்றால் ஒரு அடிதான் கொடுத்திருக்க வேண்டும். அது அனேகமாகச் "சடக்" என்ற சத்தமாகத்தான் இருந்திருக்கும். ஓநாய் பெரிய அவலச் சத்தமாகக் கத்திக் கொண்டு தரையில் பல முறை புரண்டது.

என்றுமே அறியாத இச்சத்தத்தைக் கேட்ட குதிரை பெரும் புயற் காற்றுப் போன்ற வேகத்துடன் மறைந்து விட்டது. சொற்ப நேரத்தில் ஓநாய் அனுங்கிக் கொண்டு ஒருவாறு எழுந்து யாரும் தன்னைப் பார்த்தார்களா என்று சுற்று முற்றும் பார்த்தது. பின் உடலில் ஒட்டிய மண்ணைக் கொட்டுவதற்கு, வேதனை இருந்தாலும் உடலை உலுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது. அப்போது அதன் பற்கள் கலகலத்ததை உணர்ந்தது. நிற்கவே முடியாத நிலையில் இருந்து கொண்டு குதிரை எங்கே என்று அங்கு மிங்கும் பார்த்தது. எங்கும் அதைக் காணவில்லை.

மீண்டும் ஒரு முறை அது இங்கு வந்து விட்டால் எனது நிலை மேலும் பரிதாபமாகி விடும் என்று எண்ணி இதற்கு வீரம் பின் புறத்தில் தான் இருந்திருக்கிறது. எவ்வளவு பலமான அடி.தான் அது. ஏதோ ஒரு அடியோடு போய் விட்டது. நான் தப்புவதற்காகத்தான் இறைவன் இதற்குக் கொம்பைக் கொடுக்கவில்லைப் போலும். நான் கீழே விழுந்த மாதிரிக்கு அது கொம்பையும் பாவித்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? எனது கதையே முடிந்திருக்கும்.

தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் முடிந்தது. கிராமத்தவர்களால் காவலுக்காக அனுப்பப்பட்டவர் தனது கடமையைச் சரியாகவே செய்திருக்கிறார் என்றும் எண்ணியது. முன்னுக்குக் கொம்பை கொடுக்காமல் எல்லாப் பலத்தையும் இறைவன் பின்னுக்கே கொடுத்துள்ளார் போலும். இம் மிருகத்துடன் கவனமாக இருக்க வேண்டியுள்ளது எனக்கு ஏற்பட்டுள்ள வலி எப்போது மாறப் போகிறதோ?

எமது இனத்துடன் வாழ்வதால்தான் எனது வீரம் செயல்படுகிறது. தனித்து வாழ்வது முடியாத காரியமாகி விட்டது. மீண்டும் எமது இனத்துடன் சேர்ந்து வாழ்வதே இயற்கையாகும். வெளிப் பார்வை மூலம் ஒருவரை மதிப்பிடமுடியாது என்பதை உணர்ந்து கொண்டே எனது வாழ்க்கையை இனித் தொடர வேண்டும் என்று தீர்மானித்து நொண்டி, நொண்டிக் கொண்டு மீண்டும் காட்டுக்குள் சென்று விட்டது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முகவெள்ளைபருந்தும் கோழிக்குஞ்சும்"

கற்பகத்தரு என்று அழகாகச் சொல்லப்படும் பனைகள் நிரம்பிய வளவு அது இதைப் பனந்தோப்பு என்று கூறுவார்கள். இத்தோப்பு ஒரு கிராம எல்லையிலே இருந்தது. வடலி தொடக்கம் வைரம் ஏறிய மரங்கள் வரை ஒழுங்கின்றி வளர்ந்திருந்தன. வளவுக்கு எல்லையே வரையறுக்கப்படவில்லை.

ஏனெனில் இங்கு மனித சஞ்சாரம் குறைந்திருந்ததே காரணம். இம்மரங்கள் மூலம் எவரும் பிரயோசனம் பெறுவதற்கு முற்படாமையால் மரத்தில் இருந்து விழும் ஓலைகளும், மட்டைகளும் கீழேயும், மேலேயுமாக இருந்தன. காவோலையாகியும் கீழே விழாதவை காற்றுக்கு ஆடும்போது ஏற்படும் ஒலி எவரையும் கலங்க வைப்பதாகவே இருக்கும். ஒரு ஓலை அப்படிச் சத்தமாக இருந்தால் சகிக்கலாம். ஆனால் தோப்பில் உள்ள காவோலைகள் எல்லாம் காற்று வீசும்போது எழுப்பும் சத்தத்தைத்தான் என்ன என்று சொல்லமுடியவில்லை. இத்னால்தான் மக்கள் அங்கு செல்லவில்லைப் போலும்.

இப்படியான சூழலில் அமைந்த அந்த பனந்தோப்பில் தமது குடித்தனத்தை அமைத்துக்கொள்வதை முகவெள்ளைப் பருந்துக்கள் விரும்புகின்றன. நமது நடவடிக்கைகளை யாரும் அறிந்து கொள்ள முடியாதவாறு இருக்கவே அவை செயல்படுகின்றன.

இது எங்கே முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கிறது என்று கேட்டால் எவரும் பதிலை உடனே கூறமுடியாத அளவுக்கு அவைகளின் செயல்பாடு அமைந்து இருக்கிறது. பருந்து உயரப் பறக்கும், உயரப் பறந்தாலும் காக்கை பருந்தாகுமா என்ற பழமொழியை மட்டும் கூறுவார்களேயன்றி வேறு எதுவும் இல்லை. இது காட்டுப் பறவையா, விட்டுப் பறவையா அல்லது கடல் பறவையா, என்று கூடச் சரியாகச் சொல்லமுடியாதவாறு இதன் நடவடிக்கை இருக்கிறது.

இந்தச் சூழலில் அமைந்த அந்தத் தோப்பில் ஒரு முகவெள்ளைப் பருந்து பட்ட பனை மரம் ஒன்றின் மேற்பாகத்தைக் குடைந்து அதற்குள் தனது இரண்டு குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது. அந்தப் பனந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோப்புக்குச் சமீபமாக வயல் ஒன்று இருந்தது. இந்த வயல் நிலம் நரை மண்ணாகவும், பள்ள நிலமாகவும் இருந்ததால் தோட்டச் செய்கைக்கு ஏற்றதாக இருக்கவில்லை.

இதனால் அவ்வூர் விவசாயிகள் பெரும் போக நெற்செய்கையை மட்டும் மேற்கொண்டனர். நெல் அறுவடை முடிந்ததும் அப்பக்கம் அவர்கள் செல்வதில்லை.

அந்த வயலின் மையப் பகுதியில் ஒரு குளம் இருந்தது. குளம் வெட்டியதிலிருந்து அதைத் திருத்தியதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. ஏதோ மழை வந்தால் ஓடும் வெள்ளத்தின் உதவியுடன் அக்குளம் மாரி காலத்தில் நிரம்பி விடும்.

வருத்து வெள்ளத்தால் அள்ளப்படும் மீன்களும், தவளைகளும் இக்குளத்தில் தங்கித் தமது வாழ்க்கையைத் தொடரும். ஆனால் கோடை காலத்தில் இக்குளம் கட்டாயம் வற்றிவிடும். அப்படி அது வற்றவில்லை எனின் சித்திரை மழை கடுமையானதாக இருந்திருக்க வேண்டும். எப்படியாகினும் அடுத்த மாரி தொடங்கு முன்னர் இக்குளம் வற்றியே விடும் என்றுதான் சொல்லவேண்டும்

குளம் வற்றுவதால் பருந்துகளுக்குக் கொண்டாட்டம் தான். ஒவ்வொரு நாளும் காலையே இவை குளத்துக்கு வந்துவிடும். தண்ணீர் இன்றிச் சேற்றில் தத்தளிக்கும் மீன்களையும், தவளை மற்றும் நீர் பாம்புகளையும் அவர்கள் அறியாமலே அப்படியே தமது காலினால் பற்றிப் பறக்கும்போதே கொத்திக் கிழித்து உண்ணும் தன்மையும் கொண்டது. இப்படியாக இந்த முகவெள்ளைப் பருந்து இவ்வுணவுகளைப் பெற்றுக்கொண்டு தனது செல்வங்களுக்கு அமுதமான இரையாக நேரம் தப்பாமல் வழங்கி மகிழ்ந்தது.

இப்படியாகப் பல நாட்கள் இக்குஞ்சுகளுக்குக் குள உணவு கொடுக்கப்பட்டமையால் அவர்களுக்கு இவ்வுணவில் வெறுப்பு ஏற்படவே இதற்கொரு முடிவு கட்டவேண்டும் என இருவரும் தீர்மானித்து, முதல் நடவடிக்கையாக இவ்வுணவை பகிஷ்கரிப்பதற்கு ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற் கொள்ள முடிவெடுத்தனர்.

இதைத் தமது தாயாரிடம் தெரிவித்தால் அவர் என்ன செய்வாரோ என்ற அச்சத்தினால், தாயார் உணவு கொண்டு வரும் பொழுது போராட்டத்தைத் தொடர்ந்தால் அதில் ஒரு எழுச்சியே இருக்கும் என்ற சிந்தனையுடனும் அவர்கள் இருந்தனர்.

வழமை போலப் பருந்து காலையே குளத்தடிக்குச் சென்று அங்கு ஒரு பெரிய மீனைப் பிடித்துப் பனந்தோப்பில் உள்ள பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் ஒன்றில் வைத்துக் கொத்திக் கிழித்து தனது செல்வங்களுக்குப் பலத்தைக் கொடுக்கக் கூடிய பொருள்களான ஈரல், மூளை போன்றவற்றை வேறாக்கி அதைத் தன் பிள்ளைகளுக்குக் கொடுப்பதற்காகத் தனது இருப்பிடத்துக்கு மிக ஆவலாக வந்தது.

தாயாரைக் கண்டவுடன் தமது அலகை அகலவிரித்து அன்புடன் பெற்றுக்கொள்ளும் செல்வங்கள் ஏனோ பேசாமல் இருக்கிறார்களே எனத் திகைத்தது. மேகம் இடிந்து தலைக்கு வந்து விட்டதே என்ற உணர்வுடன் என்ன விபரீதம் நடந்துவிட்டது? நான் பறக்கும் சத்தம் கேட்டாலே பரிதவிப்பவர்கள் இன்று மவுனமாக இருக்கிறார்களே! என்ன நடந்து விட்டது? என்ற அதிர்ச்சி அடைந்தவராய்க் கொண்டு வந்த உணவை அப்படியே கீழே போட்டு விட்டது

உங்களுக்கு நடந்தது என்ன? பேசாமல் இருக்கிறீர்களே! எனது உடலெல்லாம் நடுங்குகிறதே! மாம்பழங்களுக்கு நடந்தது என்ன கூறுங்கள் கூறுங்கள்! யாரேனும் உங்களைக் கொல்வதற்கு வந்தார்களா அல்லது நோயினால் அவதியுறுகிறீர்களா என்று பலவாறான அந்தரத்துடன் கேட்டது.

பின்னர் அவசர அவசரமாகக் கூட்டுக்குள் சென்று இருவரையும் தனது இறகுகளால் அரவணைத்து ''எனது செல்வங்களுக்கு என்ன நடந்தது பயப்படாமல் கூறுங்கள். யார் இங்கு வந்தார். என்னால் தாங்க முடியவில்லையே. பாம்புகள் ஏதும் வந்தனவா. உடன் கண்டு பிடித்துக் கொன்று விடுகிறேன். சொல்லுங்கள்'' என்று கேட்டது. தாயின் பாச உணர்வைத் தாங்க முடியாத குஞ்சுகள்.

''எங்களைக் கொல்வதற்கோ அல்லது இடைஞ்சல் கொடுப்பதற்கோ எவரும் இங்கு வரவில்லை. நீங்கள் எங்களுக்காக அமைத்த வீடு அப்படி என்ன பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறதா? அல்லது எங்களுக்கு நோய் வரும்படியான உணவு எதுவும் தருவதற்கு இது வரை நீங்கள் முயற்சித்தீர்களா?

தான் கடும்பசியுடன் இருந்தாலும் தனது பிள்ளைகள் ஒரு நேரப்பட்டினியுடன் இருக்க விரும்பாத நல்ல தாய் போன்றவள் அல்லவா நீங்கள்! உங்களின் நற்குணத்தையும், கடமைகளையும் நாம் நினைக்கும் போதெல்லாம் பெருமை அடைகிறோம். இதைவிட எவ்வளவோ வசதிகளைச் செய்து எங்களை வாழ வைக்கிறீர்கள்.

நாம் இன்னும் சொற்ப நாளைக்குள் பறக்கக் கற்றுக்கொள்ள இருக்கிறோம். அதற்கேற்ற பருவமடைந்து வருகிறோம். செட்டைகள் எல்லாம் முளைத்து உங்களைப் போல் முழு உருவமாகியுள்ளோம். இனி நாங்கள் பறப்பதற்கு மேலதிக சக்தி தேவைப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைப் பெற்றுக் கொள்வதற்குக் குள உணவு போதாது. ஆகவே சக்தியைத் தரக் கூடிய எமக்கு விருப்பமான உணவைத் தாருங்கள் என்று கேட்பதற்குப் பதிலாகத் தவறுதலாகப் போராட்டம் ஒன்றை நடத்தி விட்டோம். தயவு செய்து எங்களை மன்னியுங்கள்'' என்றன.

பருந்து சற்றுச் சிந்தித்து பார்த்தது. தான் சிறுமியாக இருக்கும்போது தனது தாயார் பலமான உணவுக்காகக் குள உணவோடு கோழிக்குஞ்சையும் தங்களுக்குக் கொடுத்ததை எண்ணியது. இவ்வுணவு தனக்கும் விருப்பமாக இருந்ததை உணர்ந்தது

தனது செல்வங்கள் கூறியதை முழுமையாக ஏற்றுக்கொண்டு உங்களின் போராட்டம் சரியானதே. எப்பொழுதோ இந்த உணவை இடைக்கிடையாவது நான் உங்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். இது எமது வழமையான செயல். அதைச் செய்யாதது எனது பிழையே. இன்று ஒருநாள் பொறுத்திருங்கள். நீங்கள் விரும்பிய உணவை நாளை நிச்சயம் தருவேன்.

இவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு எமக்கு இறைவன் இயற்கையாகவே சக்தியைக் கொடுத்துள்ளார் என்று கூறி இன்று கொண்டுவந்த உணவைக் கீழே விழுத்தி விட்டேன். சொற்ப நேரம் பொறுத்திருங்கள். இன்றைய பசியை முதலில் தீர்க்க வேண்டும் என்று சொல்லி உடன் சுலபமாக பெற்றுக் கொள்ளும் குளத்தடிக்குச் சென்று ஒரு தவளையைப் பற்றிக் கொண்டு அதனுடைய முக்கிய உறுப்புக்களை வேறாக்கிக் குஞ்சுகளுக்கு கொடுத்து அன்றைய உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொணர்ந்தது.

கோழிக்குஞ்சின் நினைப்பைத் தனது செல்வங்கள் தெரிவித்தமையாலும், 'நாளை நிச்சயம் தருவேன்' என்ற தனது உறுதி மொழியைக் காப்பாற்றுவதற்காகவும் அன்று மாலையே கிராமப்புறத்துக்குக் கோழிக் குஞ்சு எங்கே உள்ளது என்று அறிவதற்குக் கிளம்பியது.

கோழிகள் தன்னைக் கண்டுவிட்டால் கலவரமடைவார்கள் என்பதனைப் பருந்து முன்கூட்டியே அறிந்தமையால் கீழ் இருந்து பார்ப்பவர்களுக்கு ஒரு சிட்டுக் குருவி போன்ற அளவில் தெரியும்படி மிக உயரமாகப் பறந்து கண்காணிக்கத் தொடங்கியது. அனேகமான வீட்டில் கோழிகளைக் கூட்டில் அடைத்து வைத்திருப்பதைக் கண்டு மனம் நொந்தவராய் இன்று இதைக் கண்டுபிடிக்காவிட்டால் நாளை என் செய்வேன் என்று ஏங்கியது முயற்சி செய்வோம் என்று மேலும் வீடு வீடாகத் தனது கடும் பார்வையைச் செலுத்தி ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த வேளை நாகமணியின் வீட்டுவளவில் ஒரு கோழி தனது குஞ்சுகளுடன் குப்பைமேட்டில் உணவைத் தேடிக் கொண்டிருப்பதைக் கண்டது.

அவர்களின் நடவடிக்கைகளை விழி மூடாது பார்வையிட்டுக் கொண்டு அந்த நீல வானில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது மாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரமல்ல அபகரித்துச் செல்லும் திட்டத்தையும் வகுத்தது. இங்கிருந்து உடன் பாய்ந்து குஞ்சைப் பிடிப்பது முடியாத காரியம்.

ஆகவே அவர்களுக்குத் தெரியாமலே நாகமணியின் குப்பை மேட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் தென்னை மரத்தில் நாளை சூரியன் உதிக்கு முன்னரே வந்து விடவேண்டும். கூட்டில் இருந்து திறந்து விட்டதும் அவர்கள் நிச்சயம் குப்பை மேட்டிற்கு வருவார்கள். அந்த நேரத்தில் அதிரடி என்ற தன்மையைப் பாவித்தால் குஞ்சைப் பிடித்துச் சென்று விடலாம் என்று எண்ணியது. தான் வந்து தங்கப் போகும் மரத்தையும், குஞ்சைப் பிடித்துச் செல்லும் வழிகளையும் உன்னிப்பாகப் பலதரம் கவனித்து விட்டு மீண்டும் தனது இருப்பிடம் சென்றது.

மற்றைய நாள்கள் போன்று பருந்து தனது குஞ்சுகளுடன் கலகலப்பாக இருக்காததை உணர்ந்த பருந்துக் குஞ்சுகள் தாயாரிடம் பல விதமான சேட்டைகளைச் செய்தும் பருந்து கோழிக்குஞ்சின் நினைப்பில் இருந்தமையால் அவர்களுடன் சில வேளை சீறிச் சினந்தது எப்படியும் தாய்க்கோழிக்குக் கண்ணில் மண்ணைத் தூவி விட்டுக் குஞ்சைப் பிடித்து விடவேண்டும்.

தற்செயலாக வகுத்த திட்டம் தோல்வியடைந்தால் எங்கு போவது? நாங்கள் இவைகளை விலைக்கு வாங்க முடியுமா? ஏதோ எமக்குத் தந்துள்ள சக்தியை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் தான் இச்சக்தியுள்ள உணவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற சிந்தனையுடன் அன்று இரவு தூக்கமின்மையால் துன்பப்பட்டது.

தாயாரின் துன்பத்தை உணர்ந்த பருந்துக்குஞ்சுகள் தேவையில்லாத போராட்டத்தைத் தொடங்கி எமது தெய்வத்தாய்க்கு மன வேதனையைக் கொடுத்து விட்டோமே! எவ்வளவு அன்புடன் நேசித்த அந்த தெய்வத்திற்குப் பெரிய இடைஞ்சலை ஏற்படுத்தி விட்டோமே! ஒரு நேரம் கூட இவரின் துன்பத்தை எம்மால் சகிக்க முடியவில்லையே. இதுதான் 'சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது'' என்று கூறுவார்களோ! கோழிக்குஞ்சைப் பிடிப்பதற்கு முன்னர் எமது தாயார் இப்பாடு என்றால் அது தோல்வி அடைந்தால் நிலைமையை எப்படிச் சகிக்கப் போகிறாரோ! என்று ஏங்கின.

இவர்கள் இப்பாடு பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் கோழிக் கூட்டுக்குள் கோழி தமது குஞ்சுகளை அணைத்துத் தனது செட்டைக் குள் பாதுகாப்பாக ஒளித்து வைத்திருந்தது. அவ்வேளையில் ''ஆராரோ – ஆரிவரோ என்ற தாலாட்டுப் பாட்டுப் பாடுவது போன்று ...கொக் ... கொக் ... என்று குரல் எழுப்பியபடி தனது செல்வங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாகத் துயில் கொள்ளும்படி வேண்டிக்கொண்டது. அவர்களும் தாயாரின் தாலாட்டுப் பாட்டிற்கு மயங்கியவர்களாய் அப்படியே அமைதியாய், தூங்கியும் விட்டார்கள்.

ஒரு பக்கத்தினர் அமைதியை இழந்து தூக்கமின்மையால் இருக்க மற்றப்பகுதியினர் வரப்போகும் வினையை அறியாமல் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

காலையாகியது கதிரவன் தோன்றப் போகிறான் என்பதை ''யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே'' என்பது போல கதிரவன் தோன்றுவதற்கு முன்னரே இருள் போக ஒளி எங்கும் மெல்ல மெல்லமாக தெரியத் தொடங்கியது. தூக்கமின்றி இருந்த பருந்து தன்திட்டத்துக்கமையக் கோழிகள் கூட்டில் அமைதியாக இருக்கும் பொழுதே குறிப்பிட்ட அந்தத் தென்னை மர ஓலையின் பாளைப் பக்கமாக எதுவித சச்சரவும் இல்லாது வந்து குப்பை மேட்டையும், கோழிக்கூட்டு வாசலையும் குறிபார்தபடி நோக்கிக் கொண்டிருந்தது.

வழமை போல விடிந்து விட்டதும் நாகமணியின் மனைவி நாகேஸ்வரி கோழிக்கூட்டைத் துப்பரவு செய்வதற்காகக் கோழிகளை திறந்து விட்டார். நல்ல மனைவி நாகமணிக்கு கிடைத்ததால்தான் எல்லாம் நேரத்துக்கு நடைபெறுவதையிட்டு நாகமணி நிம்மதியாக இருக்க முடிந்தது. குடும்பச் செலவுகளைக் கோழிகள் மூலம் தனது மனைவி ஓர் அளவு நீக்கி வைப்பதையும் உணர்ந்து நாகமணி பெருமைப்படுவது வழக்கமாகவும் இருந்தது.

கோழியும் கூட்டுப்படலை திறந்ததும் நேரே குப்பை மேட்டுக்குப் பெரிய ஆரவாரத்துடன் குஞ்சுகளைக் கூட்டிக்கொண்டு ஓடியது. நேரத்துக்குச் செல்லும் பறவை உணவைச் சுலபமாகப் பெற்றுக்கொள்ளும் என்ற ஆங்கிலப் பழமொழிக்கு ஏற்றது போல் கோழி சென்றது.

சென்ற கோழி உடனேயே குப்பையைத் தனது காலினால் மிகக் கெதியாகக் கிளறியது தனது செல்வங்களுக்கு எதுவித தாமதிப்பும் இல்லாமல் உணவைக் கொடுத்துவிடவேண்டும் என்ற சிந்தனையிலேயே அப்படி அக்குப்பையைக் கிளறி இருக்க வேண்டும்.

குப்பைக்குள் இருந்த பூச்சிகள் தங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பறந்தும், ஊர்ந்தும் ஓடின. கோழி பெரிய பூச்சிகளைக் கலைத்துப் பிடித்தது. அவற்றைச் செயலிழக்கச் செய்து குஞ்சுகளுக்கு அன்பாகக் கொடுத்துக் கொண்டிருந்தது. அதே நேரம் தனது செல்வங்களுக்கு அன்பாக விரும்பிய உணவைக் கொடுப்பதற்காக முகவெள்ளை இந்த நிகழ்வுகளை ஓலையில் இருந்து தருணம் வரும்வரை பார்த்துக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சுகளுக்கு உணவு கொடுக்கும் போது கோழி அவர்களின் பாதுகாப்பையும் அடிக்கடி உறுதிசெய்து கொண்டிருந்தது. குப்பையைக் கிளறிக்கொண்டிருந்த வேளையில் குஞ்சினால் விழுங்கமுடியாத ஒரு பெரிய புழு ஒன்று வெளிப்பட்டது.

அதைக் கோழி உடன் தனது அழகால் கொத்தியது மாத்திரமல்ல நிலத்தோடு போட்டு அடித்தது. இதைக் கண்ட குஞ்சுகள் வெருட்சியடைந்து பயப்பட்டனர். சொற்ப நேரத்தில் அதைக் கொன்று கோழி தனது அலகால் தூக்கிக் குஞ்சுகளை அழைத்தபோது அக்கூட்டத்தில் இருந்த துடிப்பான வெள்ளைக் குஞ்சு மற்றக் குஞ்சுகளை இடித்துத் தள்ளிக்கொண்டு அவ்வுணவைப் பெற்று மற்றவர்கள் அபகரிப்பார்கள் என்ற காரணத்தால் குப்பை மேட்டிக்கப்பால் சொற்ப தூரம் கொண்டு சென்றது. தூரத்துக்குப் போகக் கூடாது. பாதுகாப்பு இல்லை என்று சொல்வது போன்று தாய்க் கோழி பல முறை அக்குஞ்சை எச்சரிக்கை செய்து கொண்டிருந்தது.

மறைந்திருந்துகொண்டு தருணத்தை எதிர்பார்த்தும் அவசரம் வீண் வேலையாகிவிடும் என்ற ஆங்கில மொழிக் கேற்ப செயல்பட்டும் கொண்டிருந்த பருந்து பொறுமையை இழந்தது. அதிரடியே இதற்கு ஏற்ற வழி என்ற முடிவுடன் தான் இருந்த ஓலையை உதைத்து வேகத்தைக் கூட்டிக்கொண்டு வெள்ளைக் குஞ்சை நோக்கி மிக வேகமாக பருந்து வந்தது.

பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்த தாய்க் கோழி இதைக் கண்டதும் பெரிய ஒலி எழுப்பிக் கத்தியது. இதைப்பார்த்த குஞ்சுகள் என்ன செய்வது என்று தெரியாமல் ஏங்கி அப்படியே அந்த இடத்தில் பதுங்கி விட்டன. தாய்க்கோழி பருந்து வந்த பக்கமாகப் பெரும் ஆவேசத்துடன் தாக்குவதற்கு அதை நோக்கிப் பறந்தது. மற்றக் கோழிகளும் வெருண்டு கொக்கரித்துக் கொண்டன.

கோழிகளின் ஆரவாரத்தைக் கண்ணுற்ற பப்பி நாயும் உசார் அடைந்த நிலையில் குரைத்துக் கொண்டு குப்பைப் பக்கமாக ஓடியது. இவ்வாரத்தைக் குசினியில் இருந்து அறிந்த நாகேஸ்வரி தன்னை அறியாமலேயே 'கூவ், கூவ்' என்று கத்திக்கொண்டு வெளியே வந்து குப்பை மேட்டை நோக்கி ஓடினாள். இதைப்பார்த்த வீட்டில் இருந்த மற்றவர்களும் 'கூவ், கூவ்' என்று கத்தினார்கள்.

இச்சத்தத்தைக் கேட்ட பக்கத்து வீட்டார் தங்கள் வீட்டிலும் பருந்து வந்து விடும் என்று அவர்களும் 'கூவ், கூவ்' என்று கத்தினார்கள். முற்றத்தில் படுத்திருந்த பூனை அச்சப்பட்டு வீட்டுக்குள் ஓடிவிட்டது. மரத்தில் இருந்த அணில்கள் கூட இந்த அசம்பாவிதத்தால் அமளியாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின. தற்செயலாக அங்கு வந்த புலினிப் பறவைகளும் கீக், கீக் என்று கத்தின. கொஞ்ச நேரத்துக்கு இப்பகுதி எல்லாம் ஒரே அமர்க் களமாய் இருந்தது.

அங்கு நின்ற காகத்தில் ஒன்று கா, கா என்று கத்திப் பருந்தை கலைத்துக் கொண்டு சென்றது. தற்செயலாகக் குஞ்சைக் கீழே போட்டு விட்டால் அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நப்பாசையே அதற்கு.

இப்படியான நிலையில் பருந்து சும்மாதான் போகிறது. கோழிக் குஞ்சுகள் குப்பைமேட்டில் இருந்ததைக் கண்டேன். கோழிக் குஞ்சைப் பருந்து பிடிக்கவில்லை. அது வேறு இடத்துக்குத்தான் வந்தது என்று வாதிட்டான் நாகமணியின் மூத்த மகன் நேமிநாதன். இல்லை, இல்லை பருந்து குஞ்சு ஒன்றைத் தூக்கியதை நான் கண்டேன். அத்தோடு மாத்திரமல்ல குஞ்சு கத்தியதையும் நான் கேட்டேன் என்று வாதிட்டாள் இளைய மகள் நந்தினி பருந்து வந்தால் சும்மா போகாது என்று கூறி இருவரையும் சமாளித்தார் நாகமணி. இவ்வளவு வாதாட்டங்கள் நடந்தும் ஒழிந்த குஞ்சுகள் குப்பையால் வெளிவரவில்லை. தாய்க் கோழி திடுக்கிட்டுக் கோக்... கோக்... என்று ஒலி எழுப்பி ஆகாயத்தையே பார்த்தபடி இருந்தது.

தாய்க் கோழியைச் சமாதானப்படுத்துவதற்கும், குஞ்சுகளின் நிலையை அறிவதற்கும் நாகேஸ்வரி 'பா ... பா ...' என்று கூப்பிட்டு அரிசியை நிலத்தில் வதைத்தபோது அதைக்கண்ட தாய்க் கோழி எல்லா வற்றையும் மறந்து அவ்விடத்துக்கு ஓடிவந்து தனது குஞ்சுகளை அழைத்தது.

புற்றை உடைத்துக்கொண்டு ஈசல் வெளிக்கிட்டது போல் குப்பைக் குள் ஒளித்திருந்த குஞ்சுகள் தாயின் ஓசை கேட்கும் இடத்திற்கு ஓடி வந்தன அப்போது அங்கு நின்றவர்கள் குஞ்சுகளை எண்ணத் தொடங் கினர். பதிநான்கு குஞ்சுகள் இருப்பதைக் கண்டு ஒன்றைக் காணவில்லை எங்காவது ஒளிந்திருக்கும் என்ற எண்ணத்தில் பெரிய சத்தத்துடன் மீண்டும் 'பா ... பா ...' என்று நாகேஸ்வரி கூப்பிட்டும் அந்தத் துடிப் பான வெள்ளைக் குஞ்சைக் காணாது எல்லோரும் கவலை கொண்டனர்.

இவ்வளவு நிகழ்வும் நடந்து கொண்டிருக்கும் வேளை பருந்து தனது இருப்பிடம் அடைவதற்குச் சொற்ப தூரமே செல்லவேண்டி யிருந்தது மகிழ்ச்சி பொங்கிய பருந்து தனது வேகத்தைக் குறைத்து பொப் நடனம் ஆடுபவர்கள் போன்று அங்கு, மிங்குமாகப் பறந்து கொண்டு செல்லும் வேளை.

வெள்ளைக் குஞ்சு தன்னை விடுதலை செய்யும்படி பருந்தைக் கேட்பது போல எனது தாயாரையும், சகோதரர்களையும் விட்டுப் பிரிக்கப்பட்டு விட்டேன். மரணத்தை நோக்கி விரைவாகச் செல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறேன். இக்கொடுமையை யாரும் கேட்பதற்கில்லையா? என்ன குற்றம் செய்ததற்காக இத்தண்டனை எனக்குக் கிடைத்துள்ளது? இவ்வுலகில் பிறந்தும் வாழ்க்கையை முழுமையாக அனுபவிப்பதற்கு முடியாத இயற்கை விபரீதங்கள் நடைபெறுகின்றதே! இவற்றுக்கு முடிவே இல்லையா? படைத்தல், அழித்தல் போன்றவை இறைவனால் மேற் கொள்ளப்படுகிறது என்று சமயங்கள் பறைசாற்றுகின்றனவே. இந்த விபரீதத்துக்குத் தீர்க்கமாக ஒன்றும் கூறவில்லையே! தனது பிள்ளைக்கு அமுதத்தைக் கொடுப்பதற்காக மற்றவர்களின் குழந்தையை இரையாக் கும் கொடூரமான செயல்கள் இவ்வுலகில் சாதாரண நிகழ்ச்சியாகி விட்டதே!'' என்று சொல்வது போன்று குஞ்சு கத்திக் கத்திக் கொண்டே இருந்தது.

பருந்தின் இரும்புப் பிடியில் சிக்குண்டு குஞ்சு எவ்வளவு நேரம் இருப்பது! மென்மையான உடல் உருக்குலையத் தொடங்கியது. பருந் தின் நகம் சதையைப் புட்டுக்கொண்டு செல்லக் குஞ்சின் குருதியோட் டம் குறையத் தொடங்கவே துடிதுடிப்புடன் வாழ்ந்த குஞ்சு பட பட எனத் தனது சக்தியை இழக்கத் தொடங்கியது. குஞ்சு வாயை, வாயைத் திறந்தாலும் சத்தம் வெளிவரவில்லை. ஈற்றில் அதன் வாழ்வு நீலவானம் ஆகியது.

பருந்து தனது இருப்பிடமான அந்தக் கூடு இருக்கும் பனையை அடைந்ததும், தாயார் கோழிக்குஞ்சுடன் வந்திருப்பதைப் பார்த்த பருந்துக்குஞ்சுகள் ஆரவாரித்தனர். தாயாரின் உறுதியைக் கண்டு பெருமை கொண்டனர். நாங்களும் எமது தாயார் போல் வாழப் பழகவேண்டும் என்று சபதமெடுத்துக் கொண்டனர்.

கோழிக்குஞ்சின் அந்த அழகிய வெள்ளைச் செட்டைகள் ''நாய்க்கேன் போர்த்தேங்காய்'' போல் பருந்துக்கு இருந்தது. தனது அலகினால் அவற்றைக் கொத்தி வெளியே தள்ளியது. அச்செட்டைகள் காற்றில் மிதந்து மிதந்து வரும் காட்சி ஆகாயத்தில் இருந்து மல்லிகை முல்லை மலர்கள் சொரிவது போன்று இருந்தது. செட்டை கள் அப்புறப்படுத்தப்பட்ட பின் அதன் மென்மையான உடலைக் கிழிப்பது பருந்துக்குப் பெரிய வேலையாக இருக்கவில்லை. மிச்சம் எதுவும் இல்லாமல் தனது செல்வங்களுக்கு அன்புடன் பரிமாறி யது. நல்ல உணவு கிடைத்ததையிட்டுச் சந்தோஷமடைந்த குஞ்சு களுடன் தாயாரும் இணைந்து கொண்டு அன்று முழுவதும் அக் கூட்டிலேயே இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
யாழ்ப்பாணம் 1999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org